பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 180

திங்கட்கிழமை
26 மே 2025

வைகாசி 12 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## சளி, இருமலால் இரு மாத குழந்தை உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மே 26
சளி, இருமலால் பீடிக்கப்பட்டிருந்த 2 மாதக் குழந்தை (தொடர்ச்சி 11)

# உள்ளூராட்சிக் கூட்டணி இழுபறியில் வீடு – சங்கு!

யாழ்ப்பாணம், மே 26

உள்ளூராட்சிச் சபைகளில் ஆட்சியமைக்க நிபந்தனை இன்றிய ஆதரவை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் கோரியிருந்தார். இது சாத்தியமற்றது என்று ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் இணைத்தலைவர்களில் ஒரு வரான புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார். (தொடர்ச்சி 11)

## நூற்றாண்டுப் பழமை வாய்ந்த
## கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு விரைவில் நடக்கவுள்ளது மூடுவிழா?



யாழ்ப்பாணம், மே 26
நூற்றாண்டுப் பழமைவாய்ந்த யாழ்ப்பாணம், கோப்பாய் ஆசிரிய கலாசாலை உள்ளிட்ட நாட்டில் இருக்கும் ஆசிரிய கலாசாலைகள் அனைத்தையும் தேசிய கல்வியியல் கல்லூரி (தொடர்ச்சி 09)

## இணையவழி மோசடிகளால் யாழில் ரூ. 8 கோடி “அபேஸ்”

ஒரு மாதத்தில் குவிந்த 102 முறைப்பாடுகள்
எச்சரிக்கைகளை மீறி ஏமாறும் மக்கள்

யாழ்ப்பாணம், மே 26
யாழ்ப்பாணத்தில் இணையக் குற்ற விசாரணைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு ஒரு மாத காலமாகும் நிலையில், இதுவரை 8 கோடி ரூபாவுக்கும் அதிகமான மோசடிகள் தொடர்பான 102 முறைப்பாடுகள் அந்தப் பிரிவுக்குக் கிடைத்துள்ளன.
வெளிநாட்டு (தொடர்ச்சி 11)

## ரயிலுடன் மோதுண்டு இளம் குடும்பஸ்தர் சாவு



கிளிநொச்சி, மே 26
கிளிநொச்சியில் நேற்று ரயிலில் மோதுண்டு ஒருவர் உயிரிழந்துள்ளார்.
இந்த விபத்து பாரதிபுரத்தில் உள்ள ரயில் கடவையில் நடந்துள்ளது.
பொ.அனுசன்ராஜ் (வயது-28) என்ற இளம் குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார். (தொடர்ச்சி 11)

## புலிகளை தோற்கடிக்க உதவிய பாகிஸ்தான்

மஹிந்த புகழாரம்

விரிவு பக்கம்: 02

# காணி சுவீகரிப்பு நடைமுறையை ஜனாதிபதி அநுர நீக்கவேண்டும்!

யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கடிதம்

யாழ்ப்பாணம், மே 26

வடக்கு மாகாணத்தில் தற்போது பிரகடனப்படுத்தப்பட்டுள்ள காணி சுவீகரிப்புப் பொறிமுறையை நீக்க ஆவன செய்யவேண்டும் என்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது. (தொடர்ச்சி 11)

## இன்னும் சில தினங்கள் வடக்கில் மிதமான மழை



யாழ்ப்பாணம், மே 26
எதிர்வரும் 29ஆம் திகதிவரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் சில பகுதிகளில் பிற்பகல் அல்லது இரவு வேளைகளில் மிதமானது முதல் கனமான மழை கிடைக்கலாம் (தொடர்ச்சி 11)

சுவீகரிப்பு அபாயத்தில் உள்ள

## காணி உரிமையாளர்களுக்கு இலவச சட்ட உதவிக் கூட்டம்

வெற்றிலைக்கேணியில் நேற்று முன்னெடுப்பு



வடமராட்சி, மே 26
வடக்கு மாகாணத்தில் 5 ஆயிரத்து 940 ஏக்கர் காணிகளை சுவீகரிப்பதற்காக அரசாங்கம் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ள நிலையில், அந்தக் காணிகளின் உரிமையாளர்களுக்கு இலவச சட்ட (தொடர்ச்சி 11)

## முச்சந்தி முரளி

‘அப்ப வீட்டுக்கட்சியின்ர ஆட்சிக்கனவுக்கு சங்கூதிட்டினம் போல’



## வாய்க்காலுக்குள் ஆணின் சடலம்

கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணை

கிளிநொச்சி, மே 26
கிளிநொச்சி கணேசபுரம் முனியப்பர் ஆலயத்துக்கு அருகே உள்ள வாய்க்காலில் ஆண் ஒருவரின் சடலம் (தொடர்ச்சி 11)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
| --- | --- |
| திகதி | 25.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1149 |
| வெற்றி இலக்கினம் | தனுசு |
| வெற்றி இலக்கங்கள் | 10 38 46 49 |

| NLB ஜய | |
| --- | --- |
| திகதி | 25.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0108 |
| ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கங்கள் | 1 8 0 2 |

| மெகா பவர் | |
| --- | --- |
| திகதி | 25.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2188 |
| ஆங்கில எழுத்து | K |
| சுப்பர் இலக்கம் | 16 |
| வெற்றி இலக்கங்கள் | 10 18 38 55 |

| மஹஜன சம்பத | |
| --- | --- |
| திகதி | 25.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5840 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கங்கள் | 5 2 6 4 9 6 |

| தன நிதானய | |
| --- | --- |
| திகதி | 25.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1870 |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கங்கள் | 05 32 43 47 |
| விசேட எழுத்து | W |

| அத சம்பத | |
| --- | --- |
| திகதி | 25.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0415 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கங்கள் | 6 4 9 6 |

# புலிகளைத் தோற்கடிப்பதற்கான பாகிஸ்தானின் உதவி பெரியது

## மஹிந்த புகழாரம்



**கொழும்பு, மே 26**

**விடுதலைப்புலிகளைத் தோற்கடிப்பதற்காக பாகிஸ்தான் வழங்கிய உதவி மிகப்பெரியது. அதனால்தான் பாகிஸ்தான் தூதரக அதிகாரிகளைக் கொல்வதற்கு புலிகள் முயற்சித்தனர் என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

இலங்கைக்கான பாகிஸ்தானின் தூதுவர் பஹீம் உல் அசீஸுக்கும், மஹிந்தவுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே மஹிந்த ராஜபக்ச இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விடுதலைப்புலிகளுடனான போரின்போது மட்டுமல்ல, ஐக்கிய நாடுகள் சபையால் இலங்கைக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின்போதும் பாகிஸ்தான் இலங்கையுடன் துணைநின்றது. ஒரு மிகச்சிறந்த நட்பு நாடாகவும், பிராந்தியக் கூட்டாளியாகவும் பாகிஸ்தான் இலங்கைக்கு வழங்கிய ஆதரவு அளவில்லாதது - என்றார். (ம-இ)

| சுபிரி தன சம்பத | | |
| --- | --- | --- |
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 25.05.2025 | ஞாயிற்றுக்கிழமை | 0548 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| F | 9 5 1 8 4 1 | |

| Super Ball | | |
| --- | --- | --- |
| | திகதி | தினம் |
| | 25.05.2025 | ஞாயிற்றுக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2814 | F | 07 42 72 78 |

| சனிதா | | |
| --- | --- | --- |
| | திகதி | தினம் |
| | 25.05.2025 | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| C | 26 36 45 61 | 4975 |

| SASIRI | |
| --- | --- |
| திகதி | தினம் |
| 25.05.2025 | ஞாயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0690 | 02 21 43 |

| லக்ன ராசி | | |
| --- | --- | --- |
| | திகதி | தினம் |
| | 25.05.2025 | ஞாயிற்றுக்கிழமை |
| கும்பம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 05 17 24 46 | 4526 |

| KAPRUKA | | | |
| --- | --- | --- | --- |
| | | திகதி | தினம் |
| | | 25.05.2025 | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| B | 12 | 07 28 45 69 | 1990 |

| அத கோடிபதி | | |
| --- | --- | --- |
| | திகதி | தினம் |
| | 25.05.2025 | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| M | 09 20 42 66 | 2640 |

# வடக்குக் கடற்பரப்பில் காற்றின்வேகம் எகிறும்

## மீனவர்களே அவதானம்

கொழும்பு, மே 26

வடக்குக் கடற்பரப்பில் 60 கிலோமீற்றருக்கும் மேற்பட்ட வேகத்தில் காற்று வீசும். எனவே, மீனவர்கள் மிகவும் அவதானமாகச் செயற்படுவது அவசியம் என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

மேல், சப்ரகமுவ, வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை, நுவரெலியா மற்றும் கண்டி மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும். நாட்டைச் சுற்றியுள்ள ஏனைய கடற்பகுதிகளில் சில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். சிலாபத்திலிருந்து புத்தளம் மற்றும் மன்னார் வழியாக காங்கேசன்துறை வரையிலும், மாத்தறையிலிருந்து ஹம்பாந்தோட்டை வழியாக பொத்துவில் வரையிலும் கடற்கரையோரக் கடற்பகுதிகளில் காற்றின் வேகம் மணிக்கு 55 தொடக்கம் 65 கிலோமீற்றர் வரை காணப்படும் என்றுள்ளது. (ம-இ)

# நியூஸி. துணைப்பிரதமர் இலங்கைக்கு வருகை!

கொழும்பு, மே 26

நியூஸிசிலாந்தின் துணைப்பிரதமரும் வெளிவிவகார அமைச்சருமான வின்சென்ட் பீட்டர்ஸ் நான்கு நாள்கள் உத்தியோகபூர்வப் பயணம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகைதந்துள்ளார்.

கட்டுநாயக்க விமானநிலையத்துக்கு நேற்று முன்தினம் இரவு வந்தடைந்த அவரை, இலங்கையின் அரச உயர்மட்ட அதிகாரிகள் நேரில் சென்று வரவேற்றனர்.

இந்தப் பயணத்தின்போது, ஜனாதிபதி அநுர, பிரதமர் ஹரிணி உள்ளிட்டோரை அவர் சந்திக்கவுள்ளதுடன், இருதரப்பு ஒப்பந்தங்களிலும் ஈடுபடவுள்ளார். (ம-இ)




# டெங்குக்கட்டுப்பாடு; வழிவகை ஆராய்வு

யாழ்ப்பாணம், மே 26



யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் யாழ்.மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதன்போது டெங்குநோய் வராமல் தடுப்பதற்குரிய வழிவகைகள் தொடர்பில் ஆராயப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. ஜீன் முதலாம் திகதி முதல் முன்மாதிரியாக, மாவட்டச் செயலகம் மற்றும் பாடசாலைகளில் கழிவுகள் தரம் பிரிக்கப்பட்டிருத்தல் வேண்டுமெனவும், அவ்வாறு தரம்பிரிக்காமல் காணப்படுமாயின் அதற்குரிய அபராதம் விதிக்கப்படவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. யாழ். மாவட்டத்திலுள்ள ஏனைய திணைக்களங்களை ஜூலை முதலாம் திகதி முதல் இந்த நடைமுறையைப் பின்பற்றுமாறு தெரிவிக்கப்பட்டது. மத்திய சுற்றாடல் அதிகாரசபையினர் பிளாஸ்ரிக், பொலித்தீன் கட்டுப்படுத்தல் தொடர்பான நடைமுறைகளை பொதுமக்களுக்கு சரியான முறையில் வழங்குமாறும், கழிவுகளை வீதிகளில் கொட்டுவதைக் குறைப்பதற்கான முதற்கட்ட நடவடிக்கையாக யாழ்.மாநகரசபையினாலும், கோப்பாய் பிரதேசசபையினாலும் கண்காணிப்புக்கமரா பொருத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. (ச-41-125)

# நீரிழிவு தொடர்பான வழிகாட்டி நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், மே 26




பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் பொதுமருத்துவ நிபுணர் எஸ்.பிரசாத் எழுதிய 'நீரிழிவு நோய் தொடர்பான பொதுமக்களுக்கான வழிகாட்டி' நூல் வெளியீட்டு விழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பருத்தித்துறை சூரியமஹால் மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் உயிரியல் ஆசான் சி.குணசீலன் வாழ்த்துரையையும், யாழ். பிராந்தியச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் நூல் வெளியீட்டுரையையும், கிளிநொச்சி குமாரசாமிபுரம் அ.த.க.பாடசாலையின் அதிபர் மா.செல்வதாஸ் நூல் மதிப்பீட்டுரையையும் ஆற்றினார்கள். (ம-41-66)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 66 எம்.பி.க்களுக்கு கொலை மிரட்டல்!

## பாதுகாப்பை வழங்கத் தீர்மானம்

**கொழும்பு, மே 26**

**எதிர்க்கட்சி எம்.பி.க்கள் 66 பேர் கொலை அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளனர் என்றும் எனவே அவர்களுக்கு அமைச்சர்களுக்கான பாதுகாப்பு வழங்கப்படவுள்ளது என்றும் பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. தமக்கு அமைச்சர்களுக்கான பாதுகாப்பை வழங்குமாறு சில எம்.பி.க்கள் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

இது தொடர்பில் கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றில் விசேட கூட்டம் ஒன்று இடம்பெற்றது. சபாநாயகருக்கும் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட குழுவினருக்கும் இடையிலான இந்தச் சந்திப்பின்போது தமக்கு அமைச்சர்களுக்கான பாதுகாப்புவேண்டும் என்று எதிர்க்கட்சி எம்.பி.க்கள் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தனர். இது தொடர்பில் அங்கு கருத்துக்கூறிய எதிர்கட்சித் தலைவர் தெரிவித்ததாவது:-

நாட்டின் பாதுகாப்பு தற்போது கேள்விக்குறியாக உள்ளது. தினமும் கொலைகள் இடம்பெறுகின்றன. இந்தக் கொலைகளை கட்டுப்படுத்துவதற்கு அரசு போதுமான நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளது. பாதுகாப்பைப் பலப்படுத்துவதாக அரசு கூறுகின்ற போதிலும் அரசு இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. கொலைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. இவை நாட்டின் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாகும்.

இதனால், எதிர்க்கட்சி எம்.பி.க்களும் அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளனர். பல எம்.பி.க்களுக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. ஆகவே, இந்தஎம்.பி.க்களுக்கு அமைச்சர்களுக்கான பாதுகாப்பு வழங்கப்படவேண்டும் என்றார். (அ-75)



முதலாவது மாவீரர்

## லெப்.சங்கரின் தந்தைக்கு கம்பர்மலையில் அஞ்சலி!

யாழ்ப்பாணம், மே 26

முதுமை காரணமாக பிரிட்டனில் அண்மையில் உயிரிழந்த முதலாவது மாவீரர் லெப்.சங்கரின் தந்தைக்கு கம்பர்மலையில் உள்ள அவரது சொந்த இடத்தில்நேற்று அஞ்சலி நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முதலாவது மாவீரர் லெப்டினண்ட் சங்கரின் தந்தை சின்னத்துரை செல்வச்சந்திரன் (வயது 96) பிரிட்டனில் கடந்த 12ஆம் திகதி உயிரிழந்தார். அவருக்கான அஞ்சலி நிகழ்வே, கம்பர்மலையில் அவர் பிறந்து வளர்ந்த வீட்டுவளாகத்தின் முன்பாக இடம்பெற்றுள்ளது. தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகமும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம் தலைமையில் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன. (ம-100)

## மற்றொரு நினைவாலயத்துக்கு கனடாவில் ஏற்பாடுகள் துரிதம்

### ஸ்காப்ரோவில் விரைவில் அமையும்

கனடாவின் பிரம்டன் நகரில் அமைக்கப்பட்டுள்ள நினைவாலயத்தைத் தொடர்ந்து, ஸ்காப்ரோ நகரிலும் நினைவாலயம் ஒன்றை அமைப்பதற்கு ஏற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன. நகரசபை உறுப்பினர் பார்த்தி கந்தவேல் முன்மொழிந்த தீர்மானமே ஏகமனதாக ஏற்கப்பட்டு இந்த நினைவாலயம் அமைக்கப்படவுள்ளது. நினைவாலயத்தை அமைக்கும் பணிகளுக்காக ஒன்றாரியோ மாகாண அரசாங்கத்தினதும், கனேடிய மத்திய அரசாங்கத்தினதும் உதவிகள் பெறப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. பிரம்டன் நகரில் அண்மையில் அமைக்கப்பட்ட 'தமிழர் இனப்படுகொலை நினைவாலயத்தை' அடிப்படையாக வைத்து இலங்கைக்கும் கனடாவுக்கும் இடையில் கருத்து மோதல்கள் உச்சம் பெற்றிருந்தன.

இவ்வாறான பின்னணியிலேயே, தற்போது ஸ்காப்ரோவிலும் நினைவாலயத்தை அமைப்பதற்கு ஏற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## போலந்துக் குழுவொன்று வருகின்றது இலங்கைக்கு

கொழும்பு, மே 26

போலந்து வெளிவிவகார அமைச்சர் ராடோஸ்லாவ் சிகோர்ஸ்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் 11 பேர் கொண்ட உயர்மட்டக் குழு நாளைமறுதினம் புதன்கிழமை இலங்கைக்கு வரவுள்ளது. இந்தக் குழுவினர் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உள்ளிட்ட அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களைச் சந்தித்து இருதரப்புக் கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளனர்.

இதன்போது வர்த்தகம், துறைமுக ஒத்துழைப்பு ஆகிய துறைகளில் இருதரப்பு ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-இ)



## சீன உயர்மட்டக் குழு இலங்கைக்கு வருகை!

சீனாவின் வர்த்தக அமைச்சர் வாங் வென்டாவோ தலைமையிலான 115 பேரைக் கொண்ட உயர்மட்டப் பிரதிநிதிகள் குழு நாளைமறுதினம் புதன்கிழமை இலங்கைக்கு வரவுள்ளது.

இலங்கையுடனான இருதரப்பு உறவுகளை மேலும் மேம்படுத்தவும், சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் மற்றும் புதிய பொருளாதார முதலீட்டு வாய்ப்புகள் குறித்து ஆராயும்வகையிலேயே இந்தக் குழு இலங்கைக்கு வருகைதரவுள்ளது. இந்தக் குழுவினர் ஜனாதிபதி, பிரதமருடன் நேரடி இருதரப்புப் பேச்சு வார்த்தைகளிலும் ஈடுபடவுள்ளனர். அத்துடன், எதிர்வரும் சனிக்கிழமை இடம்பெறவுள்ள இலங்கை - சீன வர்த்தக மற்றும் முதலீட்டு மன்றத்தின் மாநாட்டிலும் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-இ)




**வ**ன்னியில கன இடங்களில இப்ப கள்ளக்காணி பிடிக்கிறதே சிலருக்குத் தொழிலாப்போட்டுது. அதுவும் அரசாங்கத்தின்ர சப்போர்ட் இருந்தால் சொல்லி வேலையில்லை. இந்தக் கள்ளக்காணி பிடிக்கிறது, அரசாங்கக் காணியை ஆட்டையைப் போடுறதுக்கெல்லாம் கனக்க வழியள் இருக்குதாம். இப்ப சிலர் கடைவைக்கிறம் எண்டிட்டு றோட்டுக்கரையில இருக்கிற அரசாங்கக் காணியளில் குடியேறுவினம். முதலில நாலைஞ்சு தடி தண்டைக்கட்டி, ஒரு கொட்டில் மாதிரிப் போட்டு, சோளனையோ, ஜூஸையோ, சாப்பாட்டுச் சாமான்களையோ விப்பினம். பிறகு அந்தக் கொட்டிலுக்குத் தகரமடிப்பினம். சின்னதா வேலியடைப்பினம். அப்பிடியே மெதுவா கடையைச் சிமெந்தில கட்டி, எல்லையெல்லாம் போட்டு அறிக்கையாக்கிப் போட்டு அதை ஆருக்கும் வாடகைக்கு குடுத்திட்டு, இவை வேற இடத்தில பழையபடி கொட்டில் கடை போடுவினம், இப்பிடியே கொட்டில்கடை போட்டுப் போட்டே காணியைப் பிடிச்சு, கட்டடம் கட்டி, அதின்ர வாடகையில காலாட்டினபடி உழைக்கிற கனபேர் இருக்கினம்.

இப்பிடிக் கடைபோட்டுக் காணி பிடிச்சு ருசிகண்டவை போகப்போக தங்கட பிளானை இன்னும் லேட்டஸ்ட்டா மாத்துகினம். அது என்னெண்டால், தகரத்தில சின்னக் கூடுமாதிரி கடை செட்டப் ஒண்டை, கொஞ்சம் தள்ளி இருக்கிற வெல்டிங் கடையில முழுசா செய்வினமாம். இப்பிடி நாலைஞ்சு கடையளை முழுசாச் செய்துவைச்சிட்டு, எங்க றோட்டுக்கரையில ஆக்கள் இல்லாத காணியள் இருக்கெண்டு நோட்டம் விடுவினம். வன்னியில கன இடங்களில றோட்டுக்கரையோட அரசாங்கக் காணியள்தான் இருக்கும். அப்பிடி வளமான ஒரு காணியைக் கண்டதும், அங்க இரவோட இரவா இந்தக் கடையளைக் கொண்டுபோய் வைச்சு, கீழ சிமெந்து நிலமும் போட்டு அதைத் தங்கட இடமாக்குவினம். பாக்கிறவையும் நாலைஞ்சு கடை ஒண்டாப் போட்டால எல்லா இடமும் அனுமதி எடுத்துத்தான் போட்டிருக்கு போல எண்டு நினைப்பினம். இல்லாட்டி பிரதேசசபையே உந்தக் கடையைக் கட்டிக் குடுத்திருக்கு எண்டு நினைக்கிற ஆக்களும் இருக்கு. இப்பிடிக் கடையை வைச்சு காணியைப் பிடிச்சாலும், பெர்மிட் எடுக்கவோ, உறுதி எழுதவோ போனால்தானே சிக்கல். அதாலதான் அதுகளை வாடகைக்குக் குடுத்துப்போட்டு அந்த வரும்படியை எடுக்கினமாம்.

இப்பிடிக் கடைவைச்சுக் காணிபிடிக்கிற சிலர் முழங்காவிலில தங்கட விளையாட்டைக் காட்ட, அக்கம் பக்கத்தில கடையள் வைச்சிருந்த சனத்துக்கு டவுட் வந்திட்டுது. அவையள் உடனயே பிரதேசசபைக்கு அறிவிக்க அவையும் சம்பவ இடத்துக்கே போய்ப்பார்த்த பிறகுதான் உது காணி பிடிக்கிற விளையாட்டு எண்டு விளங்கி இருக்கு. அனுமதி ஒண்டும் இல்லாமல் கட்டின அந்தக் கடையளை உடனை அகற்றவேணும் எண்டு பிரதேசசபையின்ர செயலாளர் சொல்ல, அந்தக் கடையைப் போட்டவை சண்டித்தனம் விட்டிருக்கினம். அதோட கடையைப் பிடுங்கப்போன பிரதேசசபைக்காரரை கண்டபடி பேசினதோடு, வீடியோ எடுத்தும் வெருட்டி இருக்கினம். ஆனால் அவையின்ர எந்த விளையாட்டும் அங்க எடுபடேலை எண்டவுடன, 'ஏழைகளின் வயிற்றில் அடிக்கும் பிரதேசசபை, பார் வைத்திருப்பவருக்கு 3 மாத கால அவகாசம் குடுத்தவை எங்கட கடையை ஏன் உடன பிடுங்கினவை?' எண்டு தங்கட பக்க பிழையளை மறச்சு பிரதேசசபை செய்ததுதான் பிழை எண்டமாதிரி கதையைக் கட்டி, வீடியோவையும் போட்டிருக்கினம். வீடியோவைப் பார்த்த எல்லாருக்குமே பிரதேச சபைச் செயலாளரிலதான் கோபம் வரும். ஆனால் தீரவிசாரிச்சால்தான் கள்ளக்காணி பிடிச்சவை நாங்கள் அப்பாவி ஏழையள் ஆனால் உந்தப் பிரதேசசபைக் காரர்தான் மனிதாபிமானம் இல்லாமல் எங்கட கடையைப் பிடுங்கிப்போட்டினம் – எண்டு நாடகமாடினது விளங்கும். எப்பவும் ஒரு நாணயத்துக்கு ரண்டு பக்கம் எண்டதை சனங்கள் விளங்கிக்கொண்டால் சரி.

padsi@uthayan.com – பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

பிறப்பு 19 . 04 . 1938



இறப்பு 23 . 05 . 2025

### தம்பிமுத்து சதாசிவம்

அச்சுவேலி தோப்பை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிமுத்து சதாசிவம் அவர்கள் (23.05.2025) வெள்ளிக்கிழமை அன்று காலமானார். அன்னார், சொர்ணமலர் அவர்களின் அன்புக்கணவரும் ஸ்ரீபாலரஞ்சன், , பகீரதரஞ்சினி (கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (27.05.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அச்சுவேலி, தோப்பில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அச்சுவேலி தோப்பு இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்,
குடும்பத்தினர்.

Ranjan - 613-2618921
(கனடா)
075 029 1741

(CS/80146) D*


# ஆசிரிய வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புப்பணி விரைவில்

இந்த ஆண்டு நிறைவடைவதற்குள் ஆசிரியர் வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்புப்பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் தரம் 1 முதல் 5 வரையிலான வகுப்புகளுக்கும், 6 முதல் 11 வரையிலான வகுப்புகளுக்கும் ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. தரம் 1 முதல் தரம் 5 வரை சிங்கள மொழி மூல ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை 4,240 ஆகவும் தமிழ்மொழி மூல ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை 2,827 ஆகவும் உள்ளது.

தரம் 6 முதல் தரம் 11 வரை சிங்கள மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை 11,274 ஆகவும் தமிழ் மொழியில் 6 ஆம் வகுப்பு முதல் 11 ஆம் வகுப்புவரை உள்ள ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை 6,121 ஆகவும் காணப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)


## வேலைக்கு ஆட்கள் தேவை

விற்பனை பிரதிநிதிகள் (ஆண்கள்) வடமராட்சியை சேர்ந்தவர்கள் தேவை.

தொடர்பு:
077 757 1915

(CS/29996) D*

## 4ம் ஆண்டு நினைவுகளுடன்

தோற்றம் 18 . 02 . 1944



மறைவு 09 . 06 . 2021

அமரர் - இரத்தினம் கனகலிங்கம்
(முன்னாள் கிளைமுகாமையாளர் ந.ப.நோ சங்கம்)

திதி:- சதுர்த்தசி

கண்ணுக்கு ஒளியாய், நெஞ்சத்தில் நினைவாய், நிலையாய் என்றும் எங்களோடு எங்களின் இறைவனாய் - என்றும் எங்களை வழிநடத்த வணங்குகிறோம்.

"தகம் வாசம்"
விளையாட்டுப் பாங்க
வீதி
கல்வியங்காடு

நீங்காத
நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(CS/30147) D*

## கடை வாடகைக்கு தேவை

திருநெல்வேலி சூழலில் பலாலி வீதியிலோ / பலாலி வீதிக்கு அண்மையிலோ / பல்கலைக்கழகத்திற்கு அண்மையிலோ கடை ஒன்று வாடகைக்கு தேவை.

தொடர்பு :- 077 739 4656
077 262 6944

(CS/30180) D*

## விற்பனைக்கு

வியாபார நிலையத்திற்கு உகந்த இரும்பு றாக்கைகள், அலுமினிய சோக்கேஸ்கள் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
077 940 0328

(CS/30150) D*

## மரண அறிவித்தல்

பிறப்பு 20 . 02 . 1931



இறப்பு 25 . 05 . 2025

### அமிர்தநாதர் சந்தானபிச்சை துரைராசா

மண்டைதீவு 5ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமிர்தநாதர் சந்தானபிச்சை நேற்றைய தினம் (25.05.2025) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார். காலஞ்சென்றவர்களான அமிர்தநாதர் - ஆனாப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவரான செசிலியா அவர்களின் அன்பு கணவரும் காலஞ்சென்றவர்களான ஆரோக்கியநாதர்-ஆரோக்கியமரியரத்தினம் தம்பதியினரின் மருமகனும் அருட்தந்தை, தேவசகாயம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் கிருஸ்துராஜா, யூலியட் சியாமளா ஆகியோரின் அன்புத் தந்தையும் அன்ரனற்திரேசா, டானியல் சல்டன் ( அன்ரன்), மார்க் பிரசாத், மரிய அகல்யா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் தொம்மைப்பிள்ளை அவர்களின் மைத்துனரும் கேர்ருட் மாகிவேட் அவர்களின் உடன்பிறவா சகோதரனும், சேஜிஜோ, சிந்துஜா, யூட் ஜொனார்த், யூட் பியன்வெனு, போல் பிரசாந், பீற்றர் எய்டன் ஆகியோரின் பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் செவ்வாய்கிழமை (27.05.2025) அன்று பிற்பகல் 2 மணியளவில் வீட்டில் இருந்து மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலயத்திற்கு எடுத்து செல்லபட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பற்று பின்னர் அன்னாரின் பூத உடல் மண்டைதீவு புனித பேதுருவானவர் சேமக்காலைக்கு எடுத்து செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் - குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் சின்னத்துரை தியாகராஜா

கடந்த 26.04.2025 சனிக்கிழமை அன்று சிவபதப்பேறு அடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

அமரர் சின்னத்துரை தியாகராஜா

அவர்களின் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் இன்று 26.05.2025 திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து, அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

முத்தட்டுமட வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

(CR/45085) D*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

இறக்கத்தான் பிறந்தோம்
அதுவரை இரக்கத்தோடு இருப்போம்.

– அன்னை தெரசா–

# ஐ.நா.வும் குற்றவாளியே!

'இலங்கை உட்பட நாடுகள் சிலவற்றில் இடம்பெற்ற அட்டூழியங்களைப் போன்றே தற்போது காஸாவிலும் இடம்பெற்றுவருகின்றது. ஆனால், இலங்கை விடயத்திலும், மியான்மார் விடயத்திலும் ஐக்கிய நாடுகள் சபை பாராமுகமாய் இருந்ததைப்போன்று காஸா விடயத்தில் இருக்கக் கூடாது. காஸாவில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களை விரைவாகத் தடுக்கவேண்டும்' இப்படி உலகநாடுகளிடம் கோரிக்கை விடுத்திருக்கிறார் ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான விவகாரங்களுக்கான செயலாளர் டொம் பிளெச்சர். அவரின் இந்தக் கூற்று உலகின் மிகக்கொடிய மனித உரிமை மீறல்களுக்கு எதிரான ஐ.நா.வின் தோல்வியை வெட்டவெளிச்சமாக்கியுள்ளது. இலங்கை, மியான்மர், ருவாண்டா போன்ற நாடுகளில் இனப்படுகொலைகள் நிகழ்ந்த போது ஐ.நா. மௌனம் சாதித்ததை ஐ.நா.வே ஏற்றுக் கொண்டமையானது, அந்த அமைப்பு எந்தளவுதூரம் பல வீனமானது என்பதையும் வெளிப்படுத்தியுள்ளது. ஐ.நா. என்பது அதிகாரத்தரப்புகளின் பொம்மைதான். அந்த அதிகாரத்தரப்புகள் எதை விரும்புகின்றனவோ அதை நிறைவேற்றுவதே ஐ.நா.வின் பணி. ஒருவனின் உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கையில் அதைக் கண்டுகொள்ளாமல் இருந்துவிட்டு, அவன் இறந்த பின்னர் வந்து ஒப்பாரி வைப்பதைப்போன்றே ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான விவகாரங்களுக்கான செயலாளரின் இந்த ஒப்புதல் வாக்குமூலமும் அமைந்திருக்கிறது.

2012 இல் ஐ.நா.வின் உள்ளக அறிக்கை ஒன்றில் 'இலங்கையில் 2009 இல் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டனர்' என்ற தகவல் ஆதாரங்களோடு முன்வைக்கப்பட்டிருந்தது. அதேபோன்று 2015இலும், போர்க்குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை ஆதாரங்கள் இன்னொரு அறிக்கை மூலம் ஐ.நா.வில் ஆவணப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் அதனால் என்ன நடந்தது? போர்க்குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டார்களா? குறைந்தபட்சம் அவர்கள் மீதான விசாரணையாவது முன்னெடுக்கப்பட்டதா? அல்லது அப்படிச் செய்வதற்கு இலங்கைக்கு ஐ.நா. என்னவிதமான அழுத்தத்தைக் கொடுத்தது? எதுவுமில்லையே. இனவழிப்பு நடந்தபோதுதான் ஐ.நா.வால் எதுவும் செய்யமுடியாமல், கண்களைக் கட்டிக்கொண்டிருந்தது. ஆனால் இப்போதுதான் எல்லாம் முடிந்துவிட்டனவே. இனியாவது அந்த இனவழிப்புக்கான நீதியைப் பெற்றுக்கொடுக்க ஐ.நா.வுக்கு திராணி இல்லையா? இனவழிப்பு நடந்து 16 வருடங்கள் கடந்தபின்னரும்கூட நீதிக்கான பயணத்தில் எவ்வித முன்னேற்றமுமில்லையே. போர்க்குற்றவாளிகள் என்று குற்றஞ்சாட்டப்பட்ட இராணுவ அதிகாரிகளில் பலர் இப்போதும் உயர்பதவிகளில் இருக்கின்றனர். சுகபோகங்களுக்கும் அவர்களுக்குக் குறைவில்லை. ஆனால் போரில் வெந்துபோன மக்கள் கூட்டம்தான் இப்போதும் காணாமற் போனோருக்கு என்ன நடந்தது என்று கண்ணீரின்மீது நின்று நீதியாசகம் கேட்கின்றது.

இப்போதுகூட சிலநாடுகள் தத்தம் சுயலாபங்களுக்காகவே இறுதிப்போர் விடயத்தை ஐ.நா.வில் முன்வைக்கின்றன. இப்படி ஓர் அழுத்தத்தை வழங்குவதன்மூலம் இலங்கையைத் தம் வழிக்குக்கொண்டுவந்து தாம் நினைத்ததை அந்த நாடுகள் அடைந்தும் விடுகின்றன. அதன் பின்னர் இனவழிப்பு விடயத்தையே அந்த நாடுகள் மறந்துவிடுகின்றன. பின்னர் மீண்டும் இலங்கையின் கழுத்தை நெரித்தால்தான் காரியமாகும் என்ற நிலை வரும்போது, மீண்டும் இனவழிப்பு விவகாரத்தைத் தோண்டியெடுக்கின்றன. இப்படி அவரவர் சுயலாபங்களுக்காக ஊறுகாயாகத்தான் எம்மினத்தின் மீது நிகழ்த்தப்பட்ட இனவழிப்பை பார்க்கின்றனவே தவிர, அதுவொரு மனிதகுலத்துக்கே எதிரான பாரதூரமான குற்றமென்பதையோ, அந்தக் குற்றத்துக்குப் பரிகாரநீதி வழங்கவேண்டுமென்பதையோ அவை கிஞ்சித்தும் கவனத்திற்கொள்வதில்லை. ஈழத்தமிழர்களுக்குக் கொடூரங்களை இழைத்த போர்க்குற்றவாளிகளுக்கு உரிய தண்டனையை வழங்கியிருந்தால், காஸாவில் இப்படி கண்டபடி கைவைக்க இஸ்ரேலுக்குத் துணிச்சல் வந்திருக்குமா? இனியாவது நீதிக்கான கதவை ஐ.நா. திறக்கவேண்டும். இல்லையேல் அதன் மனிதாபிமான முகமூடி கிழியும். காலம் ஐ.நா.வை குற்றவாளிக்கூண்டில் ஏற்றும். வரலாறு ஐ.நா.வுக்குத் தனியான தீர்ப்பளிக்கும்!

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



## உப்பை இறக்குமதிசெய்ய 117 வர்த்தகர்கள் தயார்!



கொழும்பு, மே 26

**நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கும் உப்புத்தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்யும்வகையில், இந்தியாவில் இருந்து உப்பை இறக்குமதிசெய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இவ்வாறு உப்பை இறக்குமதிசெய்வதற்கு 117 வர்த்தகர்கள் விண்ணப்பித்துள்ளனர். இவர்கள் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் மெற்றிக்தொன் உப்பை இறக்குமதிசெய்வர் என்று அரசதரப்புத் தகவல்கள் கூறுகின்றன.**

தனிநபர்கள் மற்றும் தொழிற்சாலைகளின் தேவைகள் உள்ளடங்கலாக நாட்டின் ஒரு நாள் உப்புத் தேவை 500 மெற்றிக்தொன் ஆகும். வருடாந்த உப்பு தேவையில் 10 வீதமே இதுவரை நாட்டில் உற்பத்திசெய்யப்பட்டுள்ளது. வருடாந்த உப்புத் தேவை ஒரு இலட்சத்து 80 ஆயிரம் மெற்றிக்தொன் ஆகும். ஆனால், வருடத்தின் முதல் 6 மாதங்களில் 18 மெற்றிக்தொன் உப்பே உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

2024ஆம் ஆண்டு ஒரு இலட்சத்து 25 ஆயிரம் மெற்றிக்தொன் உப்பை உற்பத்திசெய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தபோதும் 40 ஆயிரம் மெற்றிக்தொன் மாத்திரமே உற்பத்திசெய்யமுடிந்தது. இதனால் கடந்த வருடம் 30 ஆயிரம் மெற்றிக்தொன் உப்பை இறக்குமதி செய்வதற்கு அனுமதிவழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-75)

## முதலமைச்சர் வேட்பாளராக அதாவுல்லா?

கொழும்பு, மே 26

மாகாணசபைத் தேர்தலின் போது, கிழக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராக அதாவுல்லாவை முன்னிறுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

தேசிய காங்கிரஸின் தலைவர் ஏ.எல்.எம்.அதாவுல்லா மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ஹக்கீம் ஆகியோருக்கிடையில் கடந்தவாரம் சந்திப்பொன்று இடம்பெற்றது. இதன் போதே, கிழக்கு மாகாணசபைத் தேர்தலை இணைந்து எதிர்கொள்வது என்றும், முதலமைச்சர் வேட்பாளராக அதாவுல்லாவை முன்னிறுத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறியவருகின்றது. (ம-இ)

## மணல் டிப்பர்கள் மடக்கிப் பிடிப்பு

யாழ்ப்பாணம், மே 26

உரிய அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிச்சென்ற மூன்று டிப்பர்களைப் பொலிஸார் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மடக்கிப் பிடித்துள்ளனர். யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின்கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு, அனுமதிபெறப்படாமல் மணல் கடத்தப்படுவதாக இரகசியத் தகவலொன்று கிடைத்தது. அதன் அடிப்படையில் சங்குப்பிட்டிப்பாலத்துக்கு அருகாமையில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸார், குறித்த டிப்பர்களை கடத்தப்பட்ட மணலுடன் மடக்கிப் பிடித்தனர். மூன்று டிப்பர்களுடன் அவற்றைச் செலுத்திச்சென்ற சாரதிகள் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (அ-27)

## 16 ஆண்டுக்குப் பின்னர் சிக்கன்குனியா தீவிரம்!

கொழும்பு, மே 26

இலங்கையில் சுமார் 16 ஆண்டுகளுக்குப் பிறகு சிக்கன்குனியா அதி தீவிரமாகப் பரவிவருகின்றது என்று பேராசிரியர் நீலிகா மலவிகே தெரிவித்துள்ளார். ஒக்ஸ்போர்ட் நானோபோர் பகுப்பாய்வு முறையைப் பயன்படுத்தி முன்னெடுக்கப்பட்ட மரபணு ஆய்வில் இந்த விடயம் தெரியவந்துள்ளது என்று பேராசிரியர் நீலிகா மலவிகே மேலும் கூறியுள்ளார். (ம-இ)



## நோர்வே நாட்டு ஆய்வுக்கப்பலை அனுமதிக்க மறுத்தது இலங்கை

கொழும்பு, மே 26

நோர்வே நாட்டு ஆய்வுக்கப்பலொன்று இலங்கைக்குள் நங்கூரமிடுவதற்கு இலங்கை அரசாங்கத்தால் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

உலக நாடுகளின் ஆய்வுக்கப்பல்கள் இலங்கைக்கு வருவதை மையப்படுத்தி பல்வேறு நெருக்கடிகளை இலங்கை தொடர்ச்சியாகச் சந்தித்தது. இதனால், இவ்வாறான நெருக்கடிகளைத் தவிர்க்கும் விதமாக சர்வதேச ஆய்வுக்கப்பல்கள் இலங்கைக்குள் வருவதற்குத் தடைக்காலம் நடைமுறையில் உள்ளது. இவ்வாறான பின்னணியிலேயே, நோர்வே நாட்டுக் கப்பலுக்கும் இலங்கை அரசாங்கம் அனுமதி மறுத்துள்ளது. (ம)

நாளை
செவ்வாய்க்கிழமை- வைகாசி 12
26.05.2025
சுபநேரம் : 08.52- 10.22
ராகுகாலம் : 04.22 - 05.52

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. செல்லத்துரை பேரி

# மணிவிழா வாழ்த்



### மணிவிழா நாயகனிற்கு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துரை

எமது கல்வி வலயத்தின் 1AB தரப் பாடசாலைகளில் ஒன்றாகவும் 150 ஆண்டுகால பாரம்பரியம் மிக்கதுமான யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றி 26.05.2025 மணிவிழா காணும் திரு.செல்லத்துரை பேரின்பநாதன் அவர்களிற்கு மணிவிழா வாழ்த்துரைப்பதில் மனமிக மகிழ்கின்றேன்.

இவர் தென்மராட்சி மண்ணில் பிறந்து வளர்ந்து இப்பிரதேசத்திலேயே தன் கல்விப் பணியினைத் தொடரும் பாக்கியம் பெற்றவர். யா/நாவற்குழி மகா வித்தியாலயத்தில் ஆசிரியப் பணியைத் தொடங்கிய இவர் 37 வருடங்களுக்கும் மேலாக ஆசிரியராகவும் அதிபராகவும் கல்வித் துறைக்கு பணியாற்றியவர். கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் கடமையாற்றி இன்னல்களைக் களைந்து மாணவர்களின் முன்னேற்றத்திற்காய் முன்னின்று முயற்சித்தவர். கல்விப் பணியுடன் நின்றுவிடாது பொதுப் பணிகளில் முனைப்புடன் செயலாற்றி முக்கிய பொறுப்புகளை ஆற்றியவர். அகில இலங்கை சமாதான நீதவான், குரு பிரதீபா விருது, ஆவணப்படுத்தலுக்கான சிறப்பு விருது போன்ற விருதுகளைத் தனதாக்கிக் கொண்டவர்.

செல்லத்துரை பெற்றெடுத்த செல்வமகன் பேரின்பநாதன் நாமம் பெற்ற பெருந்தகையாளன் வல்லமை யாவும் பெற்று வளமுடன் வாழ்கவென்று பிறந்த நன் நாளில் பிரியமுடன் வாழ்த்துகின்றேன் வாழியவே!

**திரு கி. கமலராஜன் , வலயக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி**



### பிரதிக் கல்விப் பணிப்பாளர் வாழ்த்துச்செய்தி

அறுபதாவது அகவையைப் பூர்த்தி செய்து மணிவிழாவினை கொண்டாடிக்கொண்டிருக்கும் யா/டிறிபேக் கல்லூரி அதிபர் உயர் திரு.செல்லத்துரை பேரின்பநாதன் அவர்களிற்கு வாழ்த்துரை வழங்குவதில் பெரிதும் மகிழ்வடைகின்றேன்.

கல்வியிலும் இணைபாட விதான செயற்பாடுகளிலும் மாணவர்களை ஊக்கத்துடன் வழிப்படுத்தும் தன்நிகரில்லாத் தலைவன் என்ற பெருமை அதிபர் திரு. செ.பேரின்பநாதனுக்கே உரியதொன்றாகும். டிறிபேக் கல்லூரியின் சித்தி வீதங்களை கடந்த ஆண்டுகளை ஒப்பிட்டுப் பார்க்கும் போது க.பொ.த(சா/த) பரீட்சைகளின் சித்திவீதத்தினை ஓர் படிமுறை ஒழுங்கில் உயர்வு காண வழிப்படுத்திய பெருமை அதிபரை சார்ந்ததே. கல்லூரி அதிபர் திரு.செ.பேரின்பநாதன் அவர்களின் பெரும் முயற்சியாலும் அயராத உழைப்பினாலும் டிறிபேக் கல்லூரித் தாயின் 150ஆவது ஆண்டு நிறைவு விழாவினை சென்ற மாதம் வெகு விமரிசையாக கொண்டாடிய அதிஸ்டத்திற்குரிய தலைவர் இவர் என்றால் மிகையாகாது. இக் கல்லூரி அதிபரின் ஓய்வு காலம் அழகு மிளிர மலர்ந்திட எல்லாம் வல்ல இறைவனை வேண்டி மணி விழா வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

**திருமதி.இவ்வோன் லெரின் லியன்,**
**பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வித் திட்டமிடல்) , வலயக்கல்வி அலுவலகம், தென்மராட்சி.**



### வாழ்த்துச்செய்தி

உடலின் எப்பகுதியிலும் இருளின்றி உங்கள் உடல் முழுவதும் ஒளியாய் இருந்தால் விளக்குச்சுடர்முன் நீங்கள் ஒளிமயமாய் இருப்பது போல அனைத்தும் ஒளிமயமாய் இருக்கும். (லூக்கா 11.36)

மேற்படி. இயேசுபிரான் கூறிய திருவார்த்தையுடன் எனது வாழ்த்துச் செய்தியை வரைகிறேன். யாழ்ப்பாணத்தில் தென்மராட்சிப் பகுதியில் 150 வருடங்களாக பல மாணக்கர்களுக்கு சந்ததி சந்ததியாக கல்விச்சுடராக விளங்கி, தற்போதும் அயராது கல்விக்காக பாடுபடும் டிறிபேக் கல்லூரியானது தன்னகத்தே கொண்டு இயங்கி வருகிறது என்றால் மிகையாகாது. அந்த வகையிலே தற்போதைய அதிபரும், தனது சேவையிலிருந்து ஓய்வு பெறப்போகும் அதிபருமாகிய திரு.செல்லத்துரை பேரின்பநாதன் அவர்கள் சிறப்பான அதிபர் தலைமைத்துவ பணியாற்றி செல்கிறார் என்பது மென்மேலும் இறைவன் ஆசிர்வதித்து. அவரது வழிகளை எதிர்கால சந்ததியினர் பின்பற்றி நல்ல சமூகத்தை உருவாக்க இறைவன் அருள்புரிவான்.

Rev.v.Ananth
Church of the American Ceylon mission church, chavakachari



### சிவஸ்ரீ வி.பாலகுமாரக் குருக்கள் - சாவகச்சேரி அவர்களின் மணி விழாச்செய்தி

சீரிய அதிபர்கள் பலர் நேரிய நிலையில் நெறிப்படுத்தி நின்ற யா/ டிறிபேக்கில் பாரிய பணி பல புரிந்து பற்பலரின் பாராட்டுக்களையும் பெற்று நின்ற பாங்கிதனை கற்பவர் யாவரும் நன்கறிவர். அமைதியே அணிகலனாக சாந்த சொருபமாக மனிதருள் மாணிக்கமாக மிளிர்ந்து நின்ற அதிபர் அவர்கள் போற்றுதற்குரிய நிர்வாக ஆற்றலால் ஆற்றுதற்குரிய அரும்பணி சேவையில் கற்றோர் மனங்களில் நின்று நிலைக்கின்றார். கற்றோரும் அவர் புகழை போற்றித் துதிக்கின்றார். இவ்வாறான ஆற்றல் வாய்ந்த அதிபர் ஆசிரியர்கள் சமுதாயம் பொதுச்சேவையிலும் ஏற்றம் பெற்று விளங்குவதை எல்லோரும் நன்கறிவர். இத்தகைய ஏற்றம் பெற்ற அதிபர் அவர்கள் தனது ஓய்வு காலத்தில் எல்லா நலன்களும் பெற்று விளங்க வேண்டும் என்று என்னவனான இன்னரும் ஈசனை பிரார்த்தித்து அன்னருள் ஆசிகளையும் கூடவே கூட்டி நல்கி நிற்கின்றேன்.

**சிவஸ்ரீ.வி.பாலகுமாரகுருக்கள், சாவகச்சேரி**



### யா/டிறிபேக் கல்லூரியின் பிரதி அதிபர் திருமதி. யாழினி முரளி அவர்களின் வாழ்த்து செய்தி.

ஓய்வு பெற்றுச்செல்லும் எமது கல்லூரியின் அதிபர் திரு. செ. பேரின்பநாதன் அவர்களின் மணிவிழாவிற்கான வாழ்த்துச் செய்தியினை வழங்குவதையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகின்றேன். எளிமையான தோற்றம், ஆழ்ந்த புலமை, நிறைந்த அனுபவ அறிவு என்பனவே இவரின் அணிகலன்கள் ஆகும் தனது நீண்ட கால அனுபவத்தையும், கல்விப் புலத்திலே தமக்கிருக்கும் அறிவையும் ஒருங்கே கொண்டு எமது கல்லூரியை 2018 முதல் 2025 வரை சிறப்பாக வழி நடத்தியுள்ளார். அண்மையில் சிறப்பாக நடந்து முடிந்த எமது கல்லூரியில் 150 ஆவது ஆண்டு நிறைவு விழாவே இதற்கான சான்றாகும். ஓய்வுபெற்றுச் செல்லும் எமது கல்லூரி அதிபர் திரு.செ.பேரின்பநாதன் அவர்களின் ஓய்வுக்காலம் சிறப்பானதாகவும், உடல், உளநல ஆரோக்கியத்தை கொண்டதாகவும் அமைய இறைவனை வேண்டுகிறேன்.

**திருமதி. யாழினி முரளி**
**பிரதி அதிபர் , யா/டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி.**



### வாழ்த்துச்செய்தி.

மணிவிழா காணும் பெருமதிப்பிற்குரிய எமது கல்லூரி அதிபர் திரு. செல்லத்துரை பேரின்பநாதன் அவர்களுக்கு வாழ்த்துக்கள் தெரிவிப்பதில் எண்ணில்லா மகிழ்வடைகின்றேன். மணிவிழா நாயகன் அவர்கள் 37 ஆண்டுகளில் 5 ஆண்டுகள் உதவி இளைஞர் சேவை அதிகாரியாகவும், 3 வருடங்கள் ஆசிரியராகவும், 4 வருடங்கள் பதில் அதிபராகவும், 25 வருடங்கள் தென்மராட்சி கல்வி வலயத்தில் அதிபராக கடமையாற்றி சிறந்த நிர்வாகியாகத் திகழ்ந்துள்ளார். தன்னிகரில்லா சேவையில் இருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் அதிபரை இதயபூர்வமாக வாழ்த்தி அவர் தனது ஓய்வுக் காலத்திலும் எல்லாச் சிறப்புகளோடும் நூற்றாண்டு காலம் வாழ இறையாசி வேண்டிநிற்கின்றேன்.

**திருமதி. வாணி இந்திரகுமார்**
**உப அதிபர், யா/டிறிபேக் கல்லூரி**



### வாழ்த்துச்செய்தி.

150 ஆவது ஆண்டு நிறைவில் பயணித்துக் கொண்டிருக்கும் வடபுல யாழ்ப்பாணத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க யா/ டிறிபேக் கல்லூரி "வாழ்வின் ஒளி" என்னும் மகுடவாசகத்தைத் தாங்கிய வண்ணம் நீண்ட கல்விப் பாரம்பரியத்தில் புகழ் பூத்த அதிபராகப் பொறுப்பேற்று பணியில் நிறைவு பெறும் உயர்திரு. செல்லத்துரை பேரின்ப நாதன் அவர்களின் சேவையினைப் பாராட்டி வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

எமது கல்லூரியினைப் பொறுத்தவரையில் அதன் வளர்ச்சியில் அதிபர் அவர்களின் கல்விப் பணியானது மிகக் காத்திரமானது அவரது உன்னதமான உயர்ந்த சேவையினைப் போற்றி நிற்கின்றோம். கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளில் கூடிய கவனம் செலுத்தி மாணவர்களின் நலன்களினையே முற்று முழுதாக விரும்புகின்ற நல்லதொரு அதிபராகப் பணியாற்றி அதற்காக ஆசிரியர்களோடும் பணியாளர்களோடும் எப்போதும் நெருங்கிப் பயணித்தவர். தொடர்ந்தும் அவரது ஓய்வு காலம் சிறப்பாக அமைந்திடவும் வளமுடனும் நலமுடனும் வாழ இறையாசி வேண்டி பிரார்த்திக்கின்றேன்

**திரு சூ ஜெயநேசன்**
**தலைவர், வட்ட மேசை , யா /டிறிபேக் கல்லூரி.**



### வாழ்த்துச் செய்தி

வயலும் வயல் சார்ந்த தனங்கிளப்பு மண்ணில் மலர்ந்து பேரின்பநாதன் என்னும் நாமம் சூடி கல்விதனில் சிறந்து ஆசிரியப் பணியில் இணைந்து தனது திறமையினால் அதிபராகத் தரம் உயர்ந்து கடந்த 30 ஆண்டுகள் அதிபர் சேவையில் அளப்பரிய பணியாற்றி எங்கள் டிறிபேக் அன்னையில் இணைந்து கல்லூரி வளர்ச்சியில் அரும் பணியாற்றிய எமது கல்லூரியின் தரவரிசையில் தனக்கென ஒரு தடம் பதித்து 150வது ஆண்டு கால வரலாற்றில் நூற்றாண்டு விழாவை கண்டுகொண்ட மணிவிழாக் காணும் மதிப்பிற்குரிய அதிபர் திரு செல்லதுரை பேரின்பநாதன் அவர்களும் அவர் தம் குடும்பமும் சகல செல்வங்களும் பெற்று அவரினுடைய ஓய்வு காலங்கள் மென்மேலும் சிறப்புற எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நின்று வாழ்த்துகின்றோம் வாழ்க பல்லாண்டு காலங்கள் வாழ்க வாழ்க வாழ்கவே

**திரு ம. ஸ்ரீபாஸ்கரன்**
**செயலாளர், பழைய மாணவர் ஆசிரியர் சாங்கம் , யா/டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி**



### வாழ்த்துச் செய்தி

காலத்தின் வேகமதில் அகவை அறுபது காணும் ஞாலத்தின் வேந்தன் நமது அதிபர் பேரின்பநாதன் கனவுகளைக் கையிலேந்தி நனவாக்கும் நாயகன் வெறும்" கற்களைச் செதுக்கி சிலைகளாக மாற்றிய சிற்பி. கைதடி தேசமதில் வசித்தாலும் கல்விப் பணிக்காய். கருந்துடன் சேவை நல்கும் கண்ணியமானவர். பத்துப் பாடசாலைகள் பணியாற்றி பதினொராவது பாடசாலையாக டிறிபேக் கல்லூரியில் கால் பதித்து அளப்பரிய சேவைகள் ஆற்றிய நாயகன் எம் அதிபர் அவர்கள் பணி ஓய்வில் நோய் நொடிகள் ஏதும் இன்றி நூற்றாண்டு காலம் பாரிய பணிகள் பொறுப்புடன் ஆற்றிய தாங்களை வாழ்த்துகிறோம் வாழ்க வளமுடன்!

**திருமதி வி அஜந்தன், செயலாளர் பாடசாலை அபிவிருத்தி சங்கம். யா/டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி**



### வாழ்த்துச் செய்தி

அதிபர் திரு செ. பேரின்பநாதன் அவர்கள் யா/ மட்டுவில் கமலாசனி வித்தியாலயம், யா/மட்டுலில் சரஸ்வதி வித்தியாலயம், யா/ நாவற்குழி மகாவித்தியாலயம், யா/கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை, யா/ தனங்கிளப்பு அ.த.க. பாடசாலை, யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி என்பவற்றில் சேவை புரிந்துள்ளார். இச்சேவைக் காலத்தில் 2000ஆம் ஆண்டு இடப்பெயர்வுக்குப் பின் வித்தியாலயத்தினை பாரிய அழிவுக்குப் பின் மீள் கட்டமைப்புச் செய்து தென்மராட்சி பிரதேசத்தின் முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றாக விளங்கவைத்தார். கல்லூரியில் கல்விக்கு நிகராக இணைப்பாடவிதான சாதனைகளை மேலுயர்த்தினார். 150 ஆவது ஆண்டு விழாவைச் சமூகத்துடன் சிறப்புற ஒழுங்கமைத்து நடாத்தியமை காலத்தின் பதிவுகளாகும்.

இந்நிலையில் காலத்தின் கட்டாயத்தால் அகவை 60 இல் ஓய்வு பெறும் அதிபர் அவர்கள் தான் கடந்துவந்த பாதையில் தேசிய இளைஞர் சேவை மன்றம், சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம், கிராம அபிவிருத்திச் சங்கம் பலநோக்கு, கூட்டுறவுச் சங்க தலைவர்: மத்தியஸ்தர்சபை உறுப்பினர், வடமாகாண அதிபர்சங்க நிர்வாகசபை உறுப்பினர், சனசமூக நிலையச் செயலாளர், சமாதான நீதவான் "என்ற சமூகம்சார் பன்முகப் பணிகளில் தொடர்ச்சியாக சமாந்தரமாக ஈடுபட்டுவந்த நிலையில் தனது ஓய்வுக் காலத்தில் முற்றுமுழுதாக கல்விப்புலம் சார்ந்த சமூகம் சார்ந்த பொதுச் சேவைகளில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு செயற்படக்கூடிய உடல், உள் ஆரோக்கியத்தை எல்லாம் வல்ல இறைவன் இவருக்கு வழங்கவேண்டும் என பிரார்த்தித்து மனமார்ந்த மணிவிழா வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு பொ. நடேசலிங்கம், அதிபர். (யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி ), தலைவர். தென்மராட்சிப் பிரதேச அதிபர்கள் சங்கம்**

## அனுசரனை : நண்பர்கள்




## அதிபர் செல்லத்துரை

### அதிபர் சேவை

### யா/ டிறிபேக் கல்லு

### சேவை விபரம்:

| தொ இல | சேவை நிலையமும் முகவரியும் | பதவி | பாட |
|---|---|---|---|
| 1 | தே.இ.சே.ம | உதவி இளைஞர் சேவை அதிகாரி | - |
| 2 | யா/நாவற்குழி மகா வித்தியாலயம் | ஆசிரியர் | கஸ்ட |
| 3 | ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை | பயிற்சி ஆசிரியர் | |
| 4 | யா/கைதடி நாவற்குழி அ.த.க பாடசாலை | ஆசிரியர் | கஸ்ட |
| 5 | யா/கைதடி நாவற்குழி அ.த.க பாடசாலை | பதில் அதிபர் | கஸ்ட |
| 6 | யா/தனங்கிளப்பு அ.த.க. பாடசாலை | பதில் அதிபர் | கஸ்ட |
| 7 | யா/தனங்கிளப்பு அ.த.க. பாடசாலை | அதிபர் | கஸ்ட |
| 8 | யா/மட்டுவில் கமலாசினி வித்தியாலயம் | அதிபர் | |
| 9 | யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம் | அதிபர் | |
| 10 | யா/கைதடி முத்துக்குமாரசாமி | அதிபர் | |
| 11 | யா/டிறிபேக் கல்லூரி | அதிபர் | |



### வாழ்

கல்வி புலத்திலே ஆசானாக 1993 ஆம் ஆண்டு அடி பதித்து த
ளிலே அதிபராக செவ்வனே சேவை ஆற்றி மணிவிழா காணும்
மட்டற்ற மகிழ்வடைகின்றேன். 1997 ஆம் ஆண்டு தென்மரா
பேரின்பநாதனை நான் சந்தித்தேன். தென்மராட்சியின் தெற்கு
அவர் பதில் அதிபராக அப்போது கடமையாற்றிக் கொண்
மதிக்கும் மாண்பு முதலான பண்புகளை அணிகலனாகக் கொண்டவராக இவ
கல்வி வழிகாட்டியாக அவர் விளங்கியுள்ளார். இதுவே அவரது பணியுயர்ச்சி
ஆண்டுகள் ஆசானாக, அதிபராகப் பணியாற்றி பேரின்பநாதன் ஓய்விலும் உறங்க

**வ. செல்வராசா**
**ஓய்வு நிலை மாகாண கல்வி பணிப்பாளர் வடமாகாணம்.**



### வாழ்

26. 05. 2025 அன்று தனது அறுபதாவது அகவை பூர்த்திசெ
துரை பேரின்பநாதன் அவர்களை வாழ்த்துவதில் பெருமகிழ்வ
வோர் மிகச்சிலரே ஆவர். அவர்களில் குறிப்பிட்டுக்கூறக் கூடி
மகன் தந்தைக்காற்றுமுதவி இவன் தந்தை எந்நோற்றான் கொ
மனங்களில் இடம்பிடித்தவர். அவர் பணியாற்றிய பாடசா
பெரும்பாண்மையாக கொண்ட பாடசாலைகளாகும். அவற்
வேண்டுமாயின், தன்னலமற்ற அர்ப்பணிப்பான சேவை
அதற்குச் சான்று பகிர்கிறது. அவர் தனது ஓய்வுகாலத்தில், சகல சௌபாக்கியங்
பெருமானை வணங்கி வாழ்த்துகிறேன். வாழ்க வளமுடன்.

**கு.பிரேமகாந்தன்,**
**ஓய்வுநிலை மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடம**



### வாழ்

கல்விப்பணி கடவுள் பணி. காலம் முழுவதும் பயன் பெற்றோர்
மணிவிழாக் காணும் யா/டிறிபேக் கல்லூரி அதிபர் பேரின்பந
கையுடன் காட்சியளிப்பார்கள். திருவாளர் பேரின்பநாதன் அவ
அவர்களின் மணிவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில்
சுவாமி வித்தியாலயத்தில் சமூகம் விரும்பும் ஓர் அதிபராக விள
மாணவர்கள் மகிழ்வுடன் கல்வி கற்றனர். கல்வித்திணைக்கள
முழுமையாக செயலுக்கேற்ப விளைவு இறைநிலையால் தப்பாது எமக்கு வழங்க
பெற்று சமூகத்தொண்டாற்றி இன்பமாக வாழ்க வளமுடன் என வாழ்த்தி மகிழ்கி

**திருமதி. அ. வேதநாயகம் , ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரின்பநாதன் அவர்களின்
# த்துச் சிறப்பிதழ்




## ர பேரின்பநாதன்

### சவை தரம் -I
### ல்லூரி சாவகச்சேரி

| | பாடசாலையின் தன்மை | பாடசாலையின் வகை | சேவைக்காலம் |
|---|---|---|---|
| | - | - | 01.09.1988-28.03.1993 |
| | கஸ்டப் பிரதேசம் | 1C | 01.04.1993-31.12.1993 |
| | | | 01-01-1994-31.12.1995 |
| | கஸ்ட | Type II | 01.01.1996-20.06.1996 |
| | கஸ்ட | Type II | 21.06.1996-11.10.1996 |
| | கஸ்ட | Type III | 12.10.1999-03.08.2000 |
| | கஸ்ட | Type III | 04.08.2000-05.08.2002 |
| | | Type II | 06.08.2002-01.11-2012 |
| | | Type II | 02.11-2012-22.11.2015 |
| | | 1C | 23.11.2015-10.06.2018 |
| | | 1AB | 11.06.2018-25.05.2025 |

### வாழ்த்துச் செய்தி

பதித்து தனது அயராத முயற்சியினால் படிப்படியாக பணி உயர்ந்து பல பள்ளிக
காணும் திரு செல்லத்துரை பேரின்பநாதனுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில்
தென்மராட்சி வலயக்கல்வி பணிப்பாளராக கடமையாற்றச் சென்ற வேளை திரு
ன் தெற்கு புறப் பாடசாலைகளில் ஒன்றான தனங்கிளப்பு அ.த.க பாடசாலையில்
கொண்டிருந்தார். அமைதி அடக்கம் கடமை உணர்வு மேலதிகாரிகளை
ாக இவர் விளங்கினார். தனது பணிக்காலத்தில் பலதரப்பட்ட மாணவர்களின்
ியுயர்ச்சிக்கு வழிகாட்டியது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. சுமார் 37
் உறங்காத சுடர் விட வாழ்த்துகின்றேன்.

### வாழ்த்துச் செய்தி

பூர்த்திசெய்து மணிவிழாக் காணும். யா/ஷறிபேக் கல்லூரி அதிபர் திரு.செல்லத்
ருமகிழ்வடைகின்றேன். வையத்து வாழ்வாருள் வாழ்வாங்கு வாழ்ந்து காட்டு
வறக் கூடிய மறக்கமுடியாத ஒருவர்தான் திரு. செ. பேரின்பநாதன் அவர்கள்.
றான் கொல் என்னும் வள்ளுவர் வாக்குக்கிணங்க, தன்னைச் சூழவுள்ளோர்
ப பாடசாலைகள் அனைத்துமே சமூகத்தில் நலிவுற்ற மாணவர்களைப்
. அவற்றில் பணியாற்றி அம்மாணவர்களின் வாழ்க்கையை மேம்படுத்த
சேவை மிக அவசியமாகும். இவர் பெற்றுக்கொண்ட குரு பிரதீபா விருது
ாக்கியங்களையும் பெற்று நலமுடன் வாழ எல்லாம் வல்ல விநாயகப்

, வடமாகாணம்

### வாழ்த்துச் செய்தி

பற்றோர் போற்றும் பணி. இப்புனித பணியில் அமைதியாகத் தடம்பதித்தவர்தான்
பேரின்பநாதன் அவர்கள். இறையன்பு உடையவர்கள் தான் எப்போதும் புன்ன
தன் அவர்கள் எப்போதும் மகிழ்ச்சியாக மனிதநேயத்துடன் கடமையாற்றியவர்.
ங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். எனது காலத்தில் யா/கைதடி முத்துக்குமார
ாக விளங்கினார். ஆசிரியர்களுடன் ஒற்றுமையாக நட்புறவுடன் பணியாற்றினார்.
ணக்களத்துடன் நல்லுறவைப் பேணியவர்.
வழங்கப்படும். இது இறைநீதி ஆகும். ஓய்வுகாலத்தில் இறைஉயர்வு உயர்வு
மகிழ்கின்றேன்.
ளர்.

### வாழ்த்துச் செய்தி



திருவாளர் பேரின்பநாதன் அவர்களது மணிவிழா நாளில், வாழ்த்துக்கள் கூறி, வரவேற்று நிற்பதில் பெருமகிழ்வடைகின்றேன். தென்மராட்சி கல்வி வலயத்தில், நான் பிரதிக்கல்விப் பணிப்பாளராக, பின்னர் வலயக்கல்விப் பணிப்பாளராக பணிபுரிந்த காலத்தில் நண்பர் பேரின்பநாதன் அவர்களின் பன்முக ஆளுமையை அறிந்துகொள்ளும் சந்தர்ப்பம் கிடைத்தது. முகத்தில் தவழ்ந்திடும் புன்னகையில் தரம் மாறாமல், எத்தகைய பிரச்சனைகளையும் எதிர்கொண்டு, பொருத்தமான தீர்வைக்காணும் ஆற்றலை, அதிபர் திரு. பேரின்பநாதனிடம் நான் பதடவைகள் கண்டு வியந்திருக்கின்றேன். பல்வேறுபட்ட நெருக்கடிகளால் சற்றே குழம்பிக்கிடந்த காலகட்டத்தில் யா/டிறிபேக் கல்லூரியின் அதிபர் கடமையை பொறுப்பேற்ற துணிச்சலை திரு. பேரின்பநாதன் அவர்களிடம் மட்டுமே அன்று நான் கண்டு வியந்திருக்கின்றேன். இன்றைய யா/டிறிபேக் கல்லூரியின் அமைதியான இயக்கத்திற்கு வழிகண்டு, வாய்ப்புக்களை உருவாக்கி, சாதனைப் படிகளில் ஏற்றிவிட்டபடி, தனது அதிபர் பணியில் இருந்து ஓய்வு பெறும் நண்பரை, வரலாற்றின் அடுத்தபக்கத்திற்கு வரவேற்று வாழ்த்துக் கூறி வணங்கி நிற்கின்றேன். வாழ்க வளமுடன், நாளும் நலமுடன்.

**திரு. சுப்பிரமணியம் சுந்தரசிவம். ஓய்வு நிலை வலயக்கல்விப் பணிப்பாளர்.**

### வாழ்த்துச் செய்தி



குன்றா உழைப்பும் குறையா ஊக்கமும் கொண்டு அர்ப்பணிப்புடன் அருட்பணியாற்றிய நல்ல அதிபர் செல்லதுரை பேரின்பநாதன் பற்றி பாரதி சொன்னது போல் கண்ணிலே நல்ல குணம் புன்முறுவல் கொண்ட அமைதியான முகம் ஆரவாரமற்ற நற்சேவை இவைகளை எண்ணும் போது தோன்றுவது அதிபர் பேரின்பநாதனின் முகம். தடம் புரளாத சேவையாளன். ஏழை மாணவனின் விடிவெள்ளி. காலம் அறிந்து சேவை செய்த செம்மல் இலையுதிர் காலத்திலும் இளவேனில் காலத்திலும் தடைகள் வந்த போது தனது அமைதியாலும் ஆளுமையாலும் தனது மேலதிகாரிகொண்ட பணிவான நடத்தைகளாலும் எளிதாகக் கடந்து சென்றவர். நல்ல வார்த்தைகளையும் இனிமையான புன்னகையையும் எப்போதும் சொந்தமாக்கிக் கொண்டவர். அதிபர் திரு செல்லத்துரை பேரின்பநாதன் உடன் தென்மராட்சி வலயத்தில் பயணித்த காலங்கள் மிக மிக சொற்பமாக இருந்த போதிலும் மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தின் பணிகள் எந்த வித்தியாலயத்திலும் கல்லூரிகளிலும் சீரானதாக உன்னதமாக அமைந்திருக்கும் என்பது என்னசையாத நம்பிக்கை. அதற்கமைய கடமை உணர்வு மிக்க மனித நேயம் மிக்க பண்பாளரின் சேவையை மனம் உவந்து பாராட்டுவதுடன் தொடர்ந்து சமூகம் சார்ந்த நற்பணிகள் ஆக்கி குடும்பத்துடன் நீண்ட ஆயுளுடன் மனநிறைவுடன் வாழ மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

**திருமதி றெஜினா இருதயநாதன் ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளர்.**

### வாழ்த்துச் செய்தி



ஒரு மனிதனின் வாழ்க்கை நடத்திய ஒரு மைல்கல் மணிவிழாவாகும். மனித வாழ்வின் அறுபது வருடகால பகுதியில் ஒருவரது சாதனை, சேவை என்பவற்றை பகுத்துப்பார்க்கும் சந்தர்ப்பத்தை மணிவிழா துல்லியமாக உருவாக்குகிறது. அவ்வகையில் உயர்திரு செல்லத்துரை பேரின்பநாதன் அவர்களது கடந்த 32 வருடகால கல்விப்புலம் சார்ந்த சேவைகளுக்காக அவருக்கு வாழ்த்துரைப்பதில் மனம் மகிழ்கின்றேன். அதுமட்டுமல்லாது எனது சேவைகளில் அவரது அர்ப்பணிப்பான பணிகளை பட்டியலிடும்போது மனம் பெருமிதம் கொள்கிறது. எனது சேவைக்காலத்திலே இவரது திறமைகளை இவருக்கு அருகில் இருந்து அறியும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. நிகரற்ற சேவையாளராகவும் பல முன்மாதிரியான செயற்திட்டங்களை தனது நிர்வாகத்திறமையினால் மிக எளிதாகவும் அமைதியான பண்புடன் மிக நேர்த்தியாகவும் முடிப்பதில் வல்லவராகவும் இவரை என்னால் அடையாளப்படுத்த முடிந்தது. இவர் தென்மராட்சி கல்வி வலய அதிபர் சங்க தலைவராக இருந்த காலப்பகுதியில் வலயத்துக்கான பல செயற்பாடுகளுக்கு பங்காளராக இருந்ததை என்னால் மறக்கமுடியாது. இவர் இறுதியாக அதிபராக இருந்த டிறிபேக் கல்லூரி இவரது சேவைகளை கல்விச்சமூகம் பெருமையுடனும் நன்றியுடனும் மீட்டுப் பார்த்து உவகை கொள்கிறது. இத்தகைய சிறப்புகளை கொண்ட மணிவிழா நாயகன் உடல் உள நலம் பெற்று நீண்ட காலம் ஆயுளுடன் மென்மேலும் எமது சமூகத்திற்கு நற்சேவைபுரிய எல்லாம்வல்ல இறைவனை பிரார்திக்கிறேன்.

**திரு. சுப்ரமணியம் கிருஷ்ணகுமார்,**
**ஓய்வு நிலை வலயக்கல்விப் பணிப்பாளர்.**

### வாழ்த்துச் செய்தி



யா/டிறிபேக் கல்லூரியின் அதிபரின் திரு செல்லத்துரை பேரின்பநாதன் அவர்களின் மணிவிழா வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெரும் மகிழ்வடைகிறேன். தனது 32 வருடகால அரச பணியில் ஆசிரியராக, அதிபராக பல்வேறு பாடசாலைகளில் கடமைபுரிந்து அப்பாடசாலைகளின் வளர்ச்சிக்கு வித்திட்டதுடன், சிறந்த அதிபருக்கான குரு பிரதீபா பிரபா – 2014 விருதினையும் பெற்றுள்ளார். தென்மராட்சிப் பெருநிலப்பரப்பில முன்னோடிப் பாடசாலையாக இருக்கும், இப்பாடசாலை இவ்வருடம் தனது 150வது ஆண்டைப் பூர்த்தி செய்துள்ள டிறிபேக் கல்லூரியினை தனது தலைமைத்துவம் மூலம் மிளிரச் செய்துள்ளார். இக் கல்லூரி பல்வேறு குடும்ப பின்னணியிலிருந்து வரும் மாணவர்களையும் உள்வாங்கி தன் கல்வித்தரத்தை சிதைத்து விடாமல் காத்துவருவது பாராட்டுக்குரியது. அந்தப் பெருமை கல்லூரியை வழிநடத்திய அதிபர்கள், ஆசிரியர்களையே சாரும். பொதுச்சேவையில் பல்வேறு வகிபாகங்களை தற்போதும் வகித்து வந்தாலும், அரச பணியிலிருந்து ஓய்வுபெற்றாலும் முன்னைவிட மேலும் சேவைபுரிய வேண்டும் என எதிர்பார்த்து அவரின் ஓய்வு காலம் குடும்பத்துடன் மகிழ்வாக வாழ இறைவவை பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

**திரு. த.கிருபாகரன்**
**ஓய்வுநிலை வலயக்கல்விப் பணிப்பாளர்.**

### வாழ்த்துச் செய்தி



Dear Principal Mr. Perinpanathan. You have scripted love and enduring respect in the hearts of all those who came in touch with you. Unlike buried monuments of stone, your legacy will live on in our hearts.
One of the greatest lessons you have shown us is that you cared for all your staff, the students and the entire school community. Therefore, you earned the trust and respect of all who came into contact with you especially all the members of old boys' association most of whom you have never met during your tenure with Drieberg College. With all my heart and with the blessings of all members of Old Boys Association, Sydney, Australia present,
I wish you a contented and joyous retired life. May you find useful ways to engage yourself in the service of Drieberg College community and Thenmaradchi community in the days to come. We wish you all the best in your future endeavours and hope you find joy and fulfilment in your next chapter.

**Mr. Nithiaseelan Kanapathipillai**
**President**
**DRIEBERG COLLEGE (CHAVAKACHCHERI, SRI LANKA) PAST PUPILS ASSOCIATION, (NSW BRANCH INCORPORATED), Sydney Australia**

### வாழ்த்துச் செய்தி



அதிபர் திரு. செ.பேரின்பநாதன் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு போன்ற தமிழர்களின் நல்ல பண்புகளை மாணவர்களுக்குப் புகட்டி, வருங் காலதில் மாணவ சமுதாயம் வரலாறு படைக்க பல வழிகளிலும் முயற்சி செய்து, அவர்களுக்கான பாதைகளை பல வழிகளிலும் பலமாக்கி, அறிவோடு மட்டுமன்றி, நல்ல ஆரோக்கியமானவர்களாக வாழவேண்டும் என்ற எண்ணத்தில், கல்வியில் மட்டுமன்றி, விளையாட்டுத் துறையையும் கல்லூரியில் விரிவுபடுத்தியவர். குறிப்பாக, விளையாட்டுமைதானத்தின் நடுவில் அமைந்திருந்த மதிலை DOSTA UK இன் தலைவரோடு பேசி அதற்கான செலவீனத்தை DOSTA UK இருந்து பெற்று அதனை முற்றாக அகற்றி இருந்தார். இந்த செயற்பாட்டினால் இந்த வருடம் சித்திரை மாதம் நடைபெற்ற கல்லூரியின் 150 வது ஆண்டு நிறைவு பெருவிழாவை பாடசாலை மைதானத்திலே சிறப்பாக கொண்டாடக்கூடியதாக அமைந்திருந்தது என்பது அதிபருக்கு கிடைத்த பெருமை ஆகும். மேலும் நான் அதிபருடன் தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தும் பொழுது அதிபர் நேர காலம் பார்க்காமல் எனது அழைப்பை எடுத்து பாடசாலையின்முன்னேற்றத்திற்காக என்னுடன் நீண்ட நேரம் உரையாடி இருக்கிறார். இனிவரும் காலங்களில் இனிதே இளைப்பாறி மகிழ்வாகவும், நலமாகவும் வாழ வாழ்த்துகிறோம்.

**கு.றவிச்செல்வம்**
**தலைவர், (யா/சா டிறிபேக்கல்லூரி பழைய மாணவர் ஆசிரியர் சங்கம் ஐக்கியஇராச்சியம் )**

### வாழ்த்துச் செய்தி



Dear Sir,
As you retire at the remarkable milestone of 60, we extend our heartfelt gratitude for your years of unwavering dedication, exemplary leadership, and genuine compassion toward the Drieberg College community. Your guidance has not only shaped the minds of countless students but has also nurtured the very spirit and culture of this esteemed institution. join in celebrating this well-earned new chapter of reflection, rest, and new beginnings. we wish you a retirement filled with peace, joy, and the fulfilment of all that you have hoped for. May this new phase of life be as inspiring and impactful as the years you devoted to education.
With deepest appreciation and respect,

**Dr. Senti T. Senthilmohan from Melbourne, Australia on behalf of DEEP international organisation.**

### வாழ்த்துச் செய்தி



Dear Principal Mr. S. Perinpanathan , Congratulations on your retirement! Your hard work and dedication have truly paid off, and it's time for you to enjoy the fruits of your labour. As you embark on this new chapter of your life, may you find peace, fulfillment and endless opportunities for joy. Your legacy at our Drieberg College will continue to inspire us all and we are so grateful for the wisdom you have shared over the years. Wishing you all the best in your well-deserved retirement. Happy Retirement!!! 2025

**Nelson Gunaratnam Hunt**
**President, Drieberg College Chavakachcheri**
**Alumini Association - Canada**

### வாழ்த்துச் செய்தி



"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலிற் தோன்றாமை நன்று"
முப்பத்திரண்டு வருட காலமாக, கல்விப்புலத்தின் வளர்ச்சிக்காய் தன்னை ஈந்து, அருந்தொண்டாற்றி, அகவை அறுவது எய்தி, பணியோய்வு பெறுகிறார் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் திரு. செ. பேரின்பநாதன் அவர்கள். தனங்கிளப்பை பிறப்பிடமாகக் கொண்டு, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்றப்பட்டு, ஆசிரியராகக் கடமையாற்றி, பின் மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தின் அதிபராகப் பொறுப்பேற்று, ஈற்றில் மாண்புமிகு டிறிபேக் கல்லூரியின் அதிபர் பதவியை அலங்கரித்த அவர் ஆற்றிய பணிகள் பலப்பல இறைநம்பிக்கையும், இன்சொல்லும், பணிவுமே அவரது ஆபரணங்கள். மணிவிழாக் காணும் சான்றோன் திரு. செ. பேரின்பநாதன் அவர்கள், எல்லாம் வல்ல பரம்பொருளின் அருள் பெற்று, நலமோடும் வளமோடும் நீடூழி வாழ, டிறிபேக் கல்லூரி – பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளை சார்பாக வாழ்த்தி, வணங்கி மகிழ்கிறேன்.

**வாஹினி ஸ்ரீதரன், பழைய மாணவர் ஆசிரியர் சங்கம் கொழும்புக்கிளை.**

## வாழ்த்துவோர் : பாடசாலைச் சமூகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 12 . 1950



மறைவு 25 . 05 . 2025

**சின்னையா தையல்நாயகி**

தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா தையல்நாயகி அவர்கள் நேற்று (25.05.2025) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து-சின்னம்மா தம்பதியின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-அன்னப்பிள்ளை தம்பதியின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சின்னையாவின் அன்பு மனைவியும், சிவச்செல்வன், சிவநந்தினி, சிவதர்சினி, சிவதர்மினி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற தவமணி, செல்வநாயகி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான கஜனி மற்றும் புஸ்பராசா, டர்மராசா, ராஜ்பவன் ஆகியோரின் பாசமிகு மாமியும் ரதீபா, பவீஷன், லினுசன், சந்தோஷ், லினுசிகா, ததுகேஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.05.2025) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தெல்லிப்பளை கொத்தியால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வைரவர் கோவிலடி,
தெல்லிப்பளை கிழக்கு,
தெல்லிப்பளை.

தகவல்:
குடும்பத்தினர்
077 466 9612
077 201 8129

## மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 06 . 1954



மறைவு 23 . 05 . 2025

**போல் கிளட்வின் பிறாயன் பொணிபஸ் (பபி)**
(முன்னாள் கடற்படை உத்தியோகத்தர், சசிகா லேணர்ஸ் உரிமையாளர்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட போல் கிளட்வின் பிறாயன் பொணிபஸ் (பபி) அவர்கள் கடந்த (23.05.2025) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கிறிஸ்ரி பொணிபஸ்-றீற்றா தம்பதியின் அன்பு மகனும், காலஞ்சென்ற செபஸ்ரியாம்பிள்ளை-றீற்றா தம்பதியின் மருமகனும், மேசி அவர்களின் அன்பு கணவரும், நிலுஜா (லண்டன்), சிமித், எறிக், நிறோமி, நிறேக்கா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுதாகர் (லண்டன்), தெய்வீகன் (ஆசிரியர்) ஆகியோரின் மாமனாரும் ஜெயம், காலஞ்சென்ற தங்கா மற்றும் ஜெயராணி, ஜொய்சி, மாலா, ராஜன், நிமால், செராட், நீற்றா ஆகியோரின் அன்புச் சகோதரரும் கெனித், கேஷித (லண்டன்), நிஷ்வின், நித்திக் ஆகியொரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (27.05.2025) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு கொஞ்சேஞ்சிமாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

# ஓராண்டு நினைவஞ்சலி

## அமரர் செல்லத்துரை சிவராசா

(ஓய்வு பெற்ற கிளை முகாமையாளர்-புலோலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்)



தோற்றம் 24.05.1950 மறைவு 05.06.2024

ஓர் ஆண்டோடியும்- எம்
மனம் மாறாத் துயரோடு, உம் நினைவோடு,
விழியோடு நீரோடு வழி கடந்து செல்கின்றோம்.
விளக்கின்றி இருளோடு விண்ணோடு...
ஒரு பிறையோடும் விடிவெள்ளியாய் வழிகாட்ட
இன்னுயிர் துறந்து இறைவனோடு கலந்த உங்களுக்கு
கண்ணீர் மலர்தூவி அஞ்சலிக்கும் இந்நாளில்......

உங்களை மீண்டும் சந்திக்கும் வரை எங்கள்
இதயம் உடைந்தே இருக்கும் அப்பா.

மாவில் ஒழுங்கை,
புலோலி கிழக்கு,
புலோலி.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடலுணவுகள் விலை உயர்வு

யாழ்ப்பாணம், மே 26

யாழ்.குடாநாட்டு சந்தைகளில் கடலுணவுகளின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது.

தற்போது பலத்த காற்று வீசிவருவதால் அநேகமான மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்வதைத் தவிர்த்துவருகின்றனர். இதனால் சந்தைக்குக் கொண்டு வரப்படும் கடலுணவுகளின் அளவு குறைந்தமையால அவற்றின் விலை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-25-17)

## கோப்பாய்...

களுடன் இணைத்து பயிற்சிகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்று பிரதமரும் கல்வி, உயர்கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை வாய் மூல வினாவுக்கு விடையளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது நாடாளவிய ரீதியில் எட்டு ஆசிரிய பயிற்சி கல்லூரிகள் உள்ளன. இவற்றுள் கிராகம ஆசிரியர் பயிற்சி கல்லூரி பேராதனை தேசிய கல்வியியல் கல்லூரியுடன் இணைக்கப்பட்டு அங்கு 150 பேருக்கு பயிற்சிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதே போன்று ஏனைய (கோப்பாய் உள்ளிட்ட) ஐந்து ஆசிரியர் கலாசாலைகளை தேசிய கல்வியில் கல்லூரியுடன் இணைப்பதற்கு எண்ணியுள்ளோம். ஆசிரியர் பயிற்சி மூலம் அவர்களது திறமையை அபிவிருத்தி செய்வதற்கு இந்த வருடத்தில் விசேட திட்டங்களை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தேசிய கல்வியியல் கல்லூரிகளுடன் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளையும் இணைத்து பயிற்சிகளை வழங்குவதன் மூலம் 2 ஆயிரத்து 175 பயிற்சியாளர்களை இணைத்து பயிற்சிகளை வழங்குவதற்கு திட்டமிட்டுள்ளோம். சம்பந்தப்பட்ட பயிற்சி நிறுவனங்களின் விடுதி வசதிகளை அதிகரித்து அவர்களுக்கு தேவையான வசதிகளை வழங்கும் வகையில் இம்முறை வரவுசெலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுஎன்றார். ஆசிரியர் கலாசாலைகள் நாட்டில் உள்ள அரச, தனியார் பாடசாலைகள் மற்றும் பிரிவேனாக்களில் உள்ள பட்டதாரிகள் அல்லாத பயிற்றப்படாத ஆசிரியர்களுக்குப் பயிற்சியை வழங்குகின்றன. இந்தநிலையில் கலாசாலை முறைமை இல்லாமல் செய்யப்பட்டு கல்வியியல் கல்லூரிகளுக்குள் உள்வாங்கப்படுகின்றமை தொடர்பாக கல்வியாளர்களிடையே பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளன. யாழ்ப்பாணத்தின் நூற்றாண்டுகால அடையாளமாகவும், கல்விப்பாரம்பரியத்தின் குறிகாட்டியாகவும் விளங்கும் கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரைவில் மூடப்படலாம் என்ற செய்தி கல்விப்புல வட்டாரங்களிலும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது. (அ-எ-இ)


ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் - நயினாதீவு
SRI NAGAPOOSHANI AMMAN KOVIL NAINATIVU

அறிவித்தல்
உயர் திருவிழா - 2025
1.ஆலய உயர் திருவிழாக்காலப்பகுதிக்கான உடைதேங்காய், தற்காலிக கடைகள், ஒளி,ஒலி அமைப்பு
2. திருவிழாக் காலப்பகுதி தவிர்ந்த ஏனைய நாட்கள் (ஒருவருட காலப்பகுதிக்கான) உடைதேய்காய் ஏலம்

ஆலய உயர் திருவிழா 26.06.2025 ஆம் திகதி ஆரம்பமாகி 11.07.2025 ஆம் திகதி நிறைவு பெறவுள்ளது. இக்காலப்பகுதிக்கு தங்காலிக கடைகள். உடை தேங்காய் ஆகியவற்றுக்கான ஏலம் 31.05.2025ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு ஆலய வளாகத்தில் நடைபெறவுள்ளது. ஏலத்தில் பங்குகொள்ள விரும்புவோர் குறிப்பிட்ட நேரத்தில் தவறாது சமூகமளிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

நியந்தனை

01. குளிர்பானக்கடைகள் பெற்றுக்கொண்டிருத்தல் நடத்துபவர்கள் வேண்டும். முறையான சுகாதாரம் அனுமதிப்பத்திரத்தினைப் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.
02.தேனீர்க்கடைக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
03.ஏலத்தில் முதல் நிலை பெற்றவர்கள் அன்றைய தினமே ஏலத்தொகையின் மூன்றில் ஒருபங்கினைச் செலுத்திப்பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ள வேண்டும்.
மிகுதித்தொகையினைப் பத்தாவது நாள் திருவிழாவிற்கு முன்னதாக செலுத்துதல் வேண்டும்.

தற்காலிக ஒளி ஒலி அமைப்பு:

உயர்திருவிழா காலப்பகுதியான 25.05.2025 ஆம் திகதி தொடக்கம் 11.07.2025 ஆம் திகதிய காலப்பகுதிக்கான தற்காலிக ஒளி ஒலி அமைப்புச்சேவைக்கான கூறு விலைகள் கோரப்படுகின்றன.

நியந்தனை

- 25.06.2025ஆம் திகதிக்கு முன்னர் பூரணமாக பொருத்தப்படல் வேண்டும்.
- இணைப்பு பொருத்துதல். அகற்றுதல் அனைத்துக்கும் தனித்தனியாக கூலி வழங்கப்பட மாட்டாது.
- ஒலி, ஒளி அமைப்புகளின் இணைப்பிற்கான உதிரிப்பாகங்கள் தங்களைச் சாரும்.
- சேவை திருப்திகரமாக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்ப முடிவுத்திகதி 07.06.2025 பிற்பகல் 2.00 மணி வரை ஆகும்.
- விண்ணப்பப் படிவத்ததை ஆலயத்தில் ரூபா 1000.00 செலுத்தி பெற்றுக் கொள்ள முடியும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்ததை பதிவு அஞ்சல் மூலமாகவோ அல்லது ஆலய நிர்வாக பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கூறுவிலை பெட்டியிலோ 07.06.2025 பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

நாளாந்த உடை தேங்காய்களுக்கான ஏலம்

உயர் திருவிழா காலம் தவிர்ந்த ஏனைய நாட்கள் (ஒரு வருட காலப்பகுதி) உடை தேங்காய் ஏலம் 31.05.2025 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு இடம்பெறும்.
ஏலத்தில் முதல் நிலை பெற்றவர்கள் அன்றைய தினமே ஏலத்தொகையின் மூன்றில் ஒருபங்கினைச் செலுத்திப்பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ள வேண்டும். மிகுதித்தொகையினைப் இரண்டு தவணை அடிப்படையில் செலுத்தி முடிக்க வேண்டும்.
அன்னையின் சேவையில்

திரு.ந.மோகனரூபன்
செயலாளர் அறங்காவலர்சபை
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
நயினாதீவு

(CN/45083) D*



யா/டிறிபேக் கல்லூரியின் அதிபர் உயர்திரு செல்லத்துரை பேரின்பநாதன் (SLPS-1)
அவர்களின் சேவை நயந்து வாழ்த்தி வழங்கும்

மணிவிழா வாழ்த்துப்பாமாலை



சீர் வளர் தென்மராட்சிப் பிரிவில் ஆங்கே
வியனுறு வளமார்ந்த தனங்கிளப்பில்
பேர் வளர் பேரின்பநாதன் ஐயா!
பெருமையுறு கல்வியினால் மேன்மையுற்று
ஏர் வளர் பதிகளில் அமைந்த பள்ளி
ஆசானாய் அகம் ஒளிர வித்தை காட்டி
நேர் வளர் கடமையால் முதல்வராகி
நெடிது நாள் உழைத்தீரே வாழி! வாழி!

கல்வியெனும் உயர்மட்ட தேர்ச்சிக்காக
பல்வகைமை செயற்திட்டம் வகுத்து நாளும்
வல்லமைகாண் ஆசிரிய வளத்தைக் கொண்டு
வனப்பு மிகு சேவையினைச் செய்தீர் வாழி!
நல்ல வண்ணம் நூற்றைம்பதாம் ஆண்டு விழாவை
நனி சிறக்கச் செய்த நின் பெருமை வாழி!
சொல்லும் மணி விழாக்காணும் நாயகனே வாழி!
தொலையாத புகழுடையீர் வாழி! வாழி!

போற்றுமுயர் பதவியும் பணியும் வாழி!
பொறுமையுடன் பொருந்தி நின்ற புகழும் வாழி!
ஏற்ற முறு நிருவாக முகாமை வாழி!
எழிலுறு காட்சியும் கடமை வாழி!
சீற்றமில்லாச் சிந்தையும் சிவ பக்தி வாழி!
நோயணுகாத் தேக பலம் பெற்று வாழி!
வீற்றிருக்கும் மனை மக்கள் துணையும் வாழி!
மன்னவன் போல் மண்மிசையில் பல்லாண்டு வாழி!!

ஆக்கம்
க.குணரத்தினம் (குண.ர)

வாழ்த்தி வழங்குவோர்
வட்டமேசை
யா/டிறிபேக் கல்லூரி
(26.05.2025)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மீசாலை வடக்கு கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும்,
வசிப்பிடமாகவும் கொண்ட

**திருமதி மல்லிகாதேவி தியாகராஜா(தேவி ரீச்சர்)**

(ஓய்வு பெற்ற ஆசிரியர் யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி)

**அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**

**திதி - 26.05.2025 (வைகாசி அமாவாசை) காலை 09.30**

**மண்ணில்** 27.12.1943 **விண்ணில்** 06.06.2024

அன்பின் உறைவிடமாகவும்
பாசத்தின் சிகரமாகவும்
வாழ்ந்த எம் அன்புத் தெய்வம்
எம் அம்மாவே...!

ஆண்டு ஒன்று ஆனது நீங்கள்
எம்மை விட்டுப் பிரிந்து
அழுது அழுது புலம்புகின்றோம்
உங்கள் பிரிவு தாங்காமல்...!

ஓர் ஆண்டு அல்ல பல
பத்தாண்டுகள் ஆனாலும்
மறவோம் உங்களை
ஏங்குகின்றோம் உங்கள் பாசத்திற்காய்...!

அம்மாவே உன்னைப் போன்று
அன்பு செய்ய யாரும் இல்லை இவ் உலகில்..!
ஏழேழு ஜென்மங்கள் எடுத்தாலும்
எமக்கு அன்னையாய்ப் பிறந்திடவே
நாம் ஏங்குகிறோம் தாயே..!

வாழ்நாள் முழுவதும் உங்களை
நினைக்கும் போதெல்லாம்
உங்கள் நினைவுத் துளிகள்
விழிகளின் ஓரம்
கண்ணீராய் கரைகின்றதம்மா...!

பல ஆண்டுகள் ஆனாலும்
உங்கள் நினைவுகள் பசுமையாக எம் மனதில் என்றும் நிலைத்திருக்கும்...!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்...!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

என்றும் நீங்கா நினைவுகளுடன்....
தங்களைப் பூசிக்கும்,
கணவர், மகன்மார், மருமகள்மார், பேரப்பிள்ளைகள்,
சகோதர சகோதரிகள், மைத்துனர், மைத்தினிகள்.

மீசாலை
வடக்கு
கொடிகாமம்


# தேங்காய் விலை சரிவு

யாழ்ப்பாணம், மே 26

யாழ்.குடாநாட்டில் தேங்காயின் விலையில் சற்று வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. கடந்த வாரத்தில் 250 ரூபாவாக விற்கப்பட்ட தேங்காய் ஒன்று, தற்போது 120 ரூபாவாக விற்கப்படுகிறது. வெளிமாவட்டங்களிலிருந்து அதிகளவான தேங்காய்கள் யாழ். குடாநாட்டுக்கு வந்துசேர்வதால் அவற்றின் விலை குறைந்துள்ளதாக விற்பனை யாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச- 25-17)

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 26.08.1946



மறைவு 05.06.2024

**அமரர் இராசு பஞ்சரட்ணம்**
**(இராசகுலேந்திரன்)**

(காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை ஓய்வுபெற்ற முகாரி) (Foreman)

திதி: சதுர்த்தசி.

**அன்பின் உருவமாய் அரவணைப்பின் சிகரமாய்
வாழ்ந்த எங்கள் அண்ணாவே!
நீங்கள் எங்களைப் பிரிந்து ஆண்டொன்று
ஆனாலும்! உங்கள் இன்முகமும் புன்சிரிப்பும் எங்கள்
மனதைவிட்டு அகலாது அண்ணா! உங்கள் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

சேச்லேன்,
கொக்குவில் கிழக்கு.

தகவல்
மனைவி, மக்கள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
தங்கை மாலா, வெற்றிவேலு.

(CS/58332) D*

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 19.03.1958



மறைவு 19.05.2023

**திருநாவுக்கரசு நந்தகுமார்**

**திதி :- 26,05,2025**

**காலம் என்னும் கொடியவன்,
உம்மைப் பறித்துச் சென்றாலும்,
எம் இதயச் சுவரில் உந்தன் பிம்பம்,
என்றும் அழியாத ஓவியமாய்.
எங்கிருந்தாலும் உம் ஆசி வேண்டும்,
என்றும் உந்தன் நினைவுகளுடன் வாழ்வோம்.**

(CS/58371) D*

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணையவழி...

வேலை வாய்ப்பு, உள்நாட்டு வேலை வாய்ப்பு, அதிர்ஷ்டலாபப் பரிசு என ஆசை காட்டப்பட்டு இந்தப் பெருந்தொகை பல வேறு நபர்களிடம் மோசடி செய்யப்பட்டுள்ளது. 10 மோசடிச் சம்பவங்களிலேயே 8 கோடிரூபா மோசடி செய்யப்பட்டுள்ளது.

வெளிநாட்டுக்கு அனுப்புவதாக அல்லது வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி இரண்டரைக் கோடிக்கும் அதிகமான தொகை மோசடி செய்யப்பட்டுள்ளது. வங்கிக் கணக்குகளில் பணத்தை வைப்பிலிடச் செய்து அதன் பின்னர் வேறு வங்கிக் கணக்குகளுக்கு மாற்றிப் பணம் கையாடப்பட்டுள்ளது.

உள்நாட்டில் இணையத்தின் ஊடான வேலைவாய்ப்பு என்று ஆசைகாட்டி 5 கோடி ரூபாவுக்கும் அதிக தொகை மோசடி செய்யப்பட்டுள்ளது. ஒரு தொகைப் பணத்தை வைப்பிலிட்டால், அதன் மடங்குகளில் பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்று ஆசைகாட்டப்பட்டு இந்தத் தொகை பலரிடம் கையாடப்பட்டுள்ளது.

அதேவேளை, பரிசுப் பொருள் கிடைத்திருக்கின்றது என்றும், அதைப் பெற்றுக்கொள்ள ஒரு தொகைப் பணத்தைப் வைப்பிலிடவேண்டும் என்றும் தெரிவித்து 30 இலட்சம் ரூபாவுக்கும் அதிக தொகை மோசடி செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறான மோசடிச் சம்பவங்கள் தொடர்பாக ஒரு மாத காலத்துக்குள் 102 முறைப்பாடுகள் யாழ்ப்பாணம் இணையக் குற்ற விசாரணைப் பிரிவுக்குக் கிடைத்திருக்கின்றன.

இந்த முறைப்பாடுகளுள் சமூகவலைத்தள அவதூறுப் பதிவுகள், போலிக் கணக்குகள் போன்றவை தொடர்பாகவும் 70க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் யாழ்ப்பாணம் இணையக் குற்ற விசாரணைப் பிரிவுக்குக் கிடைத்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றன. இந்த முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான மோசடிச் சம்பவங்கள் தொடர்பாகப் பல தடவைகள் எச்சரிக்கை வழங்கப்பட்டும், தொடர்ந்தும் மக்கள் மோசடியில் சிக்கிப் பெருந்தொகைப் பணத்தை இழந்து வருகின்றனர். யாழ்ப்பாணத்தில் இவ்வாறான மோசடிச் சம்பவங்கள் அதிகரித்துள்ள நிலையில், பொதுமக்கள் இது தொடர்பில் விழிப்புணர்வுடன் நடந்துகொள்ளவேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு வேலைவாய்ப்பு, உள்நாட்டு வேலைவாய்ப்பு, அதிர்ஷ்டலாபப் பரிசு என்று தொடர்புகொள்வோரிடம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்றும், தங்களின் வங்கிக் கணக்கு இலக்கங்களையோ, 'ஓரிபி' மற்றும் இரகசியக் குறியீட்டு இலக் கங்களையோ பகிரவேண்டாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(அ-எ-26)

## உள்ளூராட்சிக்...

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு உள்ளூராட்சிச் சபைகளில் ஆட்சியமைக்க நாம் ஆதரவு வழங்கும் பட்சத்தில் மாந்தை மேற்கு, வலிகாமம் தென்மேற்கு, சாவகச்சேரி பிரதேச சபை, வலி. கிழக்குப் பிரதேச சபை ஆகிய சபைகளில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஆட்சியமைக்க ஆதரவு வழங்கவேண்டும் என்று கோரியிருந்தோம்.

மத்தியகுழுவில் பேசி முடிவு அறிவிக்கப்படும் என்று தமிழரசுக் கட்சி கூறியிருந்தது. இந்நிலையில் அந்தக் கட்சியின் பதில் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் நிபந்தனையற்ற ஆதரவு வழங்கவேண்டும் என்று என்னிடம் கேட்டிருந்தார்.

வடக்கு, கிழக்கில் நாம் கணிசமான ஆசனங்களைப் பெற்றிருக்கின்றோம். அதனால் நிபந்தனையற்ற ஆதரவு சாத்தியமற்றது. அதனாலேயே சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு ஆதரவு வழங்குவது என்ற தீர்மானத்தை எடுக்கவேண்டியிருந்தது.

இது தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரனிடனும் தெரிவித்துள்ளோம். விரைவில் சிறந்த தீர்மானம் எடுப்பார்கள் என்று நம்புகின்றோம் - என்றார். (அ-எ-125-110)

## ரயிலுடன்...

மோட்டார் சைக்கிளில் பயணித்த இவர் ரயில் கடவையைக் கடக்க முயன்ற போது கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளார்.

அதேவேளை, விபத்து ஏற்பட்ட பகுதியில் உள்ள ரயில் கடவையின் சமிக்ஞை சரியாக இயங்குவதில்லை என்று அந்தப் பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.
(அ-எ-113)

## இன்னும்...

என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது. இந்த மழை மேற்காவுகைச் செயற்பாட்டால் கிடைக்கும் மழை என்பதால் இடி, மின்னலுடன் கூடியதாக இருக்கும். அதனால் இடி, மின்னல் தொடர்பாக மக்கள் அவதானமாகச் செயற்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல் துறையின் தலைவரும், வானிலை ஆய்வாளருமான நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளதாவது:-

எதிர்வரும் 27 ஆம் திகதி வங்காள விரிகுடாவில் பங்களாதேஷுக்குத் தெற்காகக் காற்றமுக்கத் தாழ்வுநிலை ஒன்று உருவாகும் வாய்ப்புள்ளது. இதனால், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட நாட்டின் எந்தவொரு பகுதிக்கும் எத்தகைய பாதிப்பும் கிடையாது. ஆனாலும், இந்த நாள்களில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் சில பகுதிகளுக்கு மிதமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.
(அ-எ-66)

## காணி...

ஆலோசனை வழங்கும் கூட்டம் மருதங்கேணியில் நேற்று நடைபெற்றது.

வெற்றிலைக்கேணியில் உள்ள பொது மண்டபத்தில் கடந்த மாதமும் இலவச சட்ட ஆலோசனை வழங்கும் கூட்டம் நடைபெற்றிருந்தநிலையில், நேற்று வெற்றிலைப்கேணியில் உள்ள றம்போ விளையாட்டுக் கழக தைானத்தில் இலவச சட்ட ஆலோசனை வழங்கும் கூட்டம் நடைபெற்றது.

அதில் ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் தலைமையில் இருபதுக்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் கலந்துகொண்டு காணிகளின் உரிமையாளர்களுக்கு சட்ட உதவி, ஆலோசனை வழங்கினர். அவர்களுடன் யாழ். பல்கலைக்கழக சட்டபீட மாணவர்களும் இணைந்திருந்தனர்.

இந்த இலவச சட்ட உதவி வழங்கும் கூட்டம் கிளிநொச்சி, மன்னார் மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் காணிகள் சுவீகரிக்கப்படும் பகுதிகளில் இடம்பெறும் என்றும் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

காணி நிர்ணய கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் 28.03.2025 ஆம் ஆண்டு திகதியில் 2430 இலக்கமிடப்பட்டு அரசாங்கத்தால் வெளியிடப்பட்டிருக்கும் வர்த்தமானி அறிவித்தலில் வடக்கிலே மொத்தமாக 5 ஆயிரத்து 940 ஏக்கர் காணிகளை, மூன்று மாத காலத்துக்குள் எவரும் உரிமை கோராத விடத்து அவை அரச காணிகளாகப் பிரகடனப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்குத் தமிழ் அரசியல்பிரதிநிதிகள் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றனர். இந்த வர்த்தமானி அறிவித்தலை உடனடியாக மீளப்பெற வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தி வருகின்றனர். (அ-எ-100-113)

## வாய்க்காலுக்குள்...

மீட்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி, ஜெயந்தி நகரைச் சேர்ந்த சோமு கஜேந்திரமூர்த்தி (வயது-37) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவர் கிளிநொச்சி மாவட்ட விவசாயத் திணைக்களத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகப் பணியாற்றுபவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவரது மோட்டார் சைக்கிளும் வாய்க்காலில் கவிழ்ந்திருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றப் பதில் நீதவான் சிவபால சுப்பிரமணியம் நேரில் சென்று விசாரணைகளை மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சடலம் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் கிளிநொச்சி பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.
(அ-எ-316-214)

## காணி சுவீகரிப்பு...

இது தொடர்பில் அந்தச் சங்கம் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு மாகாணத்தில் சில குறிப்பிடப்பட்ட பிரதேசங்களில் அமைந்துள்ள தனியார் காணிகளை அரசுடமையாக்கும் வகையில் 2025ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28ஆம் திகதி வெளியிடப்பட்ட 2430 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் சம்பந்தமாகவும் அதனுடன் தொடர்புபட்ட காணிச் சுவீகரிப்பு தொடர்பாகவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கொண்டுள்ள அதிருப்தியை தங்கள் கவனத்துக்கு கொண்டுவர விரும்புகின்றோம்.

நாட்டின் அபிவிருத்திக்கும் பொருளாதார மேம்பாட்டுக்கும் போதிய காணிகள் அரசுடமையாகவிருக்கவேண்டும் எனும் பொதுவான சிந்தனைக்கு நாம் என்றும் எதிரானவர்கள் அல்லர். ஆனால் அரசுக்கு தேவையான காணிகளைச் சுவீகரிக்கும் போது பின்பற்றப்படும் பொறிமுறைகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பாக நாம் மிகுந்த அதிருப்தியைக் கொண்டுள்ளோம்.

போரால் பாதிக்கப்பட்டு பொருளாதார நிலையிலும் மற்றும் பல்வேறு வகையிலும் மோசமான பின்னடைவுகளைச் சந்தித்துள்ள வடக்கு, கிழக்கு மாகாணங்களை மேம்பாட்டையச் செய்ய வேண்டியது அவசியமாகும். வடக்கு, கிழக்கு மக்களின் வேணவாக்களுக்கு மதிப்புக் கொடுக்கும் வகையிலான நிரந்தர தேசிய நல்லிணக்கம் ஒன்றை எய்த வேண்டிய அவசியம் ஒட்டுமொத்த நாட்டுக்கும் உள்ளது. இது நாட்டின் நீடித்த அமைதிக்கும் நிலையான பொருளாதார அபிவிருத்திக்கும் அவசியமானது. இந்தநிலையில் அரசால் தற்போது மேற்கொள்ளப்படும் காணிச் சுவீகரிப்பு போன்ற விடயங்கள் தேசிய நல்லிணக்கப்பாதைக்கு குந்தகம் விளைவிப்பதாக அமைந்துவிடுமோ எனும் அச்சம் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்துக்குள்ளது.

தமது அடிப்படை உரிமைகளும் சம அந்தஸ்தும் பாதிக்கப்பட்டபோது தமிழ் மக்கள் பல்வேறு வழிகளில் தமது எதிர்ப்புக்களை வெளியிட்டார்கள். அவை எவற்றுக்கும் மதிப்பளிக்காத அரசுகள் பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவருவதைக் காட்டிலும் அதை மேலும் தீவிரப்படுத்தும் நடவடிக்கையிலேயே ஈடுபட்டன. காலத்துக்கு காலம் பல்வேறு காணி சுவீகரிப்புச் சட்டங்களை இயற்றி தமிழ் மக்களுக்குச் சொந்தமான பூர்வீக நிலங்களை அபகரித்து அவர்களது இருப்புக்கு சவால்விடுக்கும் பல செயல்களை கடந்து போன அரசாங்கங்கள் செய்தன.

காரணம் எதுவும் குறிப்பிடப்படாது மிகக் குறுகிய காலத்தில் காணிகளைச் சுவீகரிக்கும் நோக்கில் விடுக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் ஜனநாயக ஏற்புடைய பொறிமுறையன்று. வடக்கு மக்களில் பெரும்பகுதியானவர்கள் போரால் நாட்டைவிட்டு வெளியேறியுள்ள சூழலில் மிகக் குறுகிய காலத்தில் காணிகளை உரிமை கோருமாறு நிர்ப்பந்திக்கப்படுவது திட்டமிடப்பட்ட பழிவாங்கலாகும். அதுமட்டுமன்றி போர் நடைபெற்ற காலங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் தமிழர்கள் இந்த நிலத்தின் பூர்வீக உரித்தாளர்கள் என்பதற்கான வரலாற்று எழுத்தாதாரங்கள் அழிக்கப்பட்டன. அவற்றுள் தீயிடப்பட்ட காணி உறுதிகளும் உள்ளடங்கும். போர் எனும் ஒற்றைக் காரணத்தை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு சந்தர்ப்பங்களில் நடைபெற்ற அனர்த்தங்களில் வடக்கின் காணிப் பதிவகங்களில் இருந்த உறுதிகள் அழிந்து போயிருக்கின்றன. இந்தச் சூழலில் மிகக் குறுகிய காலத்தில் பிரகடனப்படுத்தப்பட்ட காணிகளுக்கு உரிமை கோருங்கள் அல்லது அது அரசுடமையாகும் என அறிவிப்பது இன்னொரு வடிவத்தில் கட்டமைக்கப்பட்ட அடக்குமுறையே என நாம் கருதுகின்றோம்.

பொறுப்பு வாய்ந்த ஒரு புலமைத்துவத் தொழிற்சங்கம் எனும் அடிப்படையில் காணிசுவீகரிப்பு விடயத்தை தங்கள் தீவிர கவனத்துக்கு கொண்டுவரவேண்டியது நமது கடமையென நம்புகின்றோம். எனவே தயவுசெய்து தற்போது பிரகடனப்படுத்தப்பட்ட காணிச் சுவீகரிப்புப் பொறிமுறையை நீக்க ஆவன செய்ய வேண்டும் என்று தங்களை விநயமாக கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது.
(அ-எ-இ)

## சளி, இருமலால்...

ஒன்று உயிரிழந்துள்ளது. கரவெட்டியைச் சேர்ந்த எட்வேட் தனுசன் றெஜிக் என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

கடந்த 22ஆம் திகதி சளி, இருமலால் பாதிக்கப்பட்ட குழந்தை மந்திகை ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்றிருந்த நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டது. ஆயினும் நேற்று முன்தினம் குழந்தை உயிரிழந்துள்ளது. இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார்.
(அ-எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹைதராபாத் தாண்டவம் சுருண்டது கொல்கத்தா!




ஐ.பி.எல். தொடரின் நேற்று நடந்த ஆட்டம் ஒன்றில் ஹைதராபாத் சன்ரைசர்ஸ் அணி 110 ஓட்டங்களால் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியை வெற்றி கொண்டது.

டெல்லியில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஹைதராபாத் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கிய அபிஷேக் சர்மா டிராவிஸ் ஹெட் அதிரடியாக ஆடினர். அபிஷேக் சர்மா 16 பந்துகளில் 32 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். ஹெட் 40 பந்துகளில் 76 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து வந்த கிளாசனும், இஷான் கிஷனும் அபாரமாக ஆடி ஓட்டங்களைக் குவித்தது. கிளாசன் 37 பந்துகளில் சதம் விளாசினார்.

ஹைதராபாத் அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 278 ஓட்டங்களை எடுத்தது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா அணி அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. அந்த அணி சார்பாக சுனில் நரேன் 31 ஓட்டங்களையும், மனிஷ் பாண்டே 37 ஓட்டங்களையும், ஹர்ஷித் ராணா 34 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். 18.4 பந்துப்பரிமாற்றத்தில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்த கொல்கத்தா அணி 168 ஓட்டங்களைப் பெற்று 110 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. (எ-இ)

உணவு பரிமாறுபவர் தேவை
யாழ் நகரை அண்மித்த உணவகம் ஒன்றிற்கு உணவு பரிமாறுபவர்கள் தேவை (ஆண், பெண்)
077 203 0625



# குஜராத்தை வீழ்த்தி சென்னை அபாரம்!

ஐ.பி.எல். தொடரில் நேற்று நடந்த ஆட்டம் ஒன்றில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி, குஜராத் டைட்டன்ஸ் அணியை 83 ஓட்டங்களால் வெற்றிகொண்டது.

அகமதாபாத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென்னை அணி துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.


ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கிய ஆயுஷ் மாத்ரேயும், கான்வேயும் களமிறங்கினர். அதிரடியாக ஆடிய ஆயுஸ் மாத்ரே 17 பந்துகளில் 34 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அதன் பின்னர் வந்த உர்வில் படேல் 19 பந்துகளில் 37 ஓட்டங்கள் பெற்றார். நிதானமாக ஆடிய கான்வே 52 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அதன்பின்னர் வந்த பிரேவிஸ் 19 பந்துகளில் அரைச்சதம் பெற்றார். 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து சென்னை அணி 230 ஓட்டங்கள் குவித்தது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய குஜராத் அணி அடுத்தடுத்து விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது. இறுதியில் 18 பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்த குஜராத் அணி, 147 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இந்த ஆட்டத்துடன் சென்னை அணி இந்தத் தொடரை நிறைவு செய்துள்ளது. ஐ.பி.எல். வரலாற்றில் சென்னை அணி புள்ளிப்பட்டியலில் கடைசி இடத்தில் தொடரை நிறைவு செய்தது இதுவே முதன்முறையாகும். (எ-இ)

## மரண அறிவித்தல்



### தம்பையா சண்முகநாதன்

(கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவு சங்க முன்னாள் களஞ்சிய காப்பாளர்)

யாழ்/சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி, இல66/2 திருவையாறை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா சண்முகநாதன் அவர்கள் நேற்று முன்தினம் (24.05.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தெய்வத்திரு தம்பையா- தெய்வானைப்பிள்ளை தம்பதியின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தெய்வத்திரு இரத்தினம்-பொன்னம்மா தம்பதியின் அன்பு மருமகனும், இந்திராவதி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நாகபூரணம், சோமசுந்தரம், கனகாம்பிகை மற்றும் பரமேஸ்வரி, தனலக்குமி, தேவராணி (ஓய்வு நிலை பிரதி அதிபர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் இரவீந்திரன், இராயேஸ்வரன், இரகுநாதன், இராமநாதன், ரஞ்சனாதேவி, இராஜேந்திரன், இராசமலர், இந்திராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் பார்த்தீபன் (மேலதிக மாவட்ட பதிவாளர்-கரைச்சி), தனுசன் (ஆசிரியர் முல்/பாலிநகர் மகாவித்தியாலயம்) மற்றும் காலஞ்சென்றவர்களான சஞ்சீவன், சுஜீவன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், கினித்தா (அபிவிருத்தி உத்தியோகத்தர், கனகாம்பிகைகுளம்-கரைச்சி), யுதர்சனா (ஆசிரியர்-வவுனியா விக்னேஸ்வரா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் நதுஜன், அக்சவி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.05.2025) திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம்
28 . 02 . 1951



மறைவு
25 . 05 . 2025

### கணபதிப்பிள்ளை கந்தசாமி

கரவெட்டியினைப் பிறப்பிடமாகவும் ஜேர்மன், கரணவாயினை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கந்தசாமி அவர்கள் நேற்று (25.05.2025) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-புதியாள் தம்பதியின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா-பொன்னம்மா தம்பதியின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சிதம்பரம் அவர்களின் அன்புச் சகோதரரும் ஜெயராணி (ஜெயம்) அவர்களின் பாசமிகு கணவரும் தீபவினோதன் (கனடா) அவர்களின் அன்புத் தந்யையும் தேவலோஜினியின் மாமனாரும் இந்திராணி, காலஞ்சென்ற கதிர்காமநாதன், வனஜாராணி, சுப்பிரமணியம், காலஞ்சென்ற கணேசு அவர்களின் மைத்துனரும் காலஞ்சென்றவர்களான மகேந்திரநாதன், நடராஜா அவர்களின் சகலனும் காலஞ்சென்ற குமாரசாமி, கிருஷ்ணகலா அவர்களின் சம்பந்தியும் தேவநேசன் (கொழும்பு), பாமினி (BOC), காந்திநேசன் (கண்ணன்-கனடா), சிவநேசன் (லண்டன்), திவாகர், திருமால் ஆகியோரின் மாமனாரும் வாகீசன், வானதி, தரணி, சாந்தகுமார், ஜெயவதனி, நிராஞ்சினி ஆகியோரின் சிறிய தந்தையும் அக்ஷனா, பிரணதி, தன்விக் (கனடா), ஹேமசாயினி, பிரசாந், அக்சியா, நிவேதன், லக்ஷியா, பகித்திரன், அபினா, றிசோனா, நிதீசன் (கனடா) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (26.05.2025) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கிராய்இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கரணவாய்,
கரவெட்டி.
077 727 1478

தகவல்:
குடும்பத்தினர்
077 761 5234



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் … இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.05.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org